விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 09.03.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 99 | பக்கங்கள் : 16



05

விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டார் நாமல்



05

யாழில் தீப்பந்தம் ஏந்தி போராட்டம்



07

பருத்தித்துறை பெண் கொரோனாவால் மரணம்



08

திண்டாடும் பிரிட்டிஷ் அரச குடும்பம்

## காரைநகர் இ.போ.ச சாலையில் எட்டு பேருக்கு தொற்று உறுதி!

### யாழில் நேற்று மாத்திரம் 22 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,மார்ச்.09

யாழ்ப்பாணத்தில் மேலும் 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 8 பேர் இ.போ.ச. காரை நகர் சாலையில் பணியாற்றும் சாரதிகள், நடத்துநர்கள், காப்பாளர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடத்தில் 387 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்

02

## செம்மணியில் வீசப்பட்ட வெடிமருந்துப் பொதி!

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயானத் தில் வெடிமருந்து பொதியொன்று வீசப்பட் டிருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.

நல்லூர் - செம்மணி வீதியின் வடக்கே உள்ள இந்து மயானப் பகுதியில் புதிய பையொன்றினுள் குறித்த வெடிமருந்து கள் வீசப்பட்டிருந்தமையை பொது மக்கள் கண்டு பொலிஸாருக்கு

02

# வலிகாமம் வடக்கில் 3,300 ஏக்கர் இன்னும் இராணுவத்தினர் வசம்!

### அமெரிக்க ஒக்லாண்ட் நிறுவன ஆய்வறிக்கையில் தகவல்

வாஷிங்டன், மார்ச் 09

“யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள போதிலும், வலிகாமம் வடக்கில் இன்னமும் 3,300 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளது” என அமெரிக்காவின் ஒக்லாண்ட் நிறுவனம் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

02

## இரு தேர்தல்களை நடத்த தயாராகி வருகிறது அரசு

கொழும்பு, மார்ச் 09

எதிர்வரும் ஜூன் மாதத் தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுமென்பதால் அந்த மாதத் தில் மாகாண சபைத் தேர் தலை நடத்த அரசாங்கம் தயா ராகி வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் தொடர்ந்து மாகாண சபை தேர்தலை பிற் போடுவது உசிதமல்ல என அரசாங்கம் தீர்மானித் துள்ளதாக தெரிய

02

## நல்லூர் உணவு தவிர்ப்புக்கு விக்கி நேரில் சென்று ஆதரவு

யாழ்ப்பணம், மார்ச் 09

பல்கலைக்கழக மாணவர்க ளால் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டம் மேலும் வலுப் பெறவேண்டும் என்று பாராளு மன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக் னேஸ்வரன் அழைப்பு விடுத் துள்ளார்.

நல்லூரில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் 8ஆவது நாளான நேற்றைய தினம் நேரில் கலந்து கொண்டு கருத்துத்

02

## எனக்கு தகவல் வந்திருந்தால் தாக்குதலை தடுத்திருப்பேன்

### ரணில் விக்கிரமசிங்க சொல்கிறார்



கொழும்பு,மார்ச்.09

ஈஸ்டர் தாக்குதல் தொடர் பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையின் நோக்கமும், காரணிகளும் தெளிவில்லை. பிரதான குற்றவாளிகள் யார் என்ற உண்மை களை ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிக்கத் தவறியுள்ளது என

02

## மக்கள் வங்கி உதவி முகாமையாளர் நேற்று இரவு நல்லூர் விபத்தில் சாவு

### மின்தடைப்பட்ட வேளையில் துயரம்

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணம், நல்லூரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை உதவி முகாமையாளர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் கட் டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக் குள்ளானதில் தலையில் படு காயமடைந்து அவர் சம்பவ இடத்திலேயே அவர் உயிரி ழந்தார்.

மின் தடைப்பட்டிருந்தவேளை யில் விபத்து இடம்பெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்



டது. இந்தச் சம்பவம் இன்று இரவு 8.45 மணியளவில் நல்லூர் வீர மாகாளி அம்மன் வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பருத்தித்துறை யைச் சேர்ந்தவரும் நல்லூ ரில் வசிப்பவருமான

02

வடக்கு - கிழக்கு உட்பட

## நாட்டில் பல இடங்களில் நேற்று திடீர் மின்தடை

கொழும்பு, மார்ச் 09

இலங்கையின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று இரவு திடீர் மின்தடை ஏற்பட்டது.

நேற்று இரவு 7.00 மணி முதல் இவ் வாறு திடீர் மின்தடை ஏற்பட்டது.

வடக்கு மாகாணம் முழுவதும் மின் தடை ஏற்பட்டுள்ளது.

02

## ஹெரோயின், கஞ்சாவுடன் யாழில் ஐவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

ஒரு கிலோ கஞ்சா மற்றும் 6 கிராம் ஹெரோயினுடன் யாழ். பொலிஸ் நிலை யப் போதைப்பொருள் தடுப்புப் பிரி வினரால் ஐவர் கைதுசெய்யப்பட் டனர்.

02

## என் மீதான குற்றச்சாட்டை கருத்தில் கொள்ளவில்லை

### கூறுகின்றார் மைத்திரிபால

கொழும்பு,மார்ச்.09

“ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் என்னைக் குற்ற வாளியாக அடையாளப்படுத்தியே ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. என்னைக் குற்றவாளி என குற்றம் சுமத்த முடியும், ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை நான் கருத்தில் கொள்ளவில்லை.”

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப் பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலருக்கு எதிராகக் குற்றவியல் வழக்கு தொடரவேண் டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02

## செம்மணியில்...

அறிவித்துள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்கு பயன்படுத்தவென கடத்தப்பட்ட வெடிபொருளே வீசப்பட்டுள்ளதாவென்ற சந்தேகம் எழுந்துள்ளது.

## காரைநகர்...

பட்டன. இவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 382 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை சிற்றூழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப் படுத்தப்பட்டவர்.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கார்கில்ஸ் கட்டடத் தொகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றுபவர்.

இதேவேளை, இ.போ.ச. காரைநகர் சாலையைச் சேர்ந்த 90 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இவர்களில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் சாரதிகள் மூவர், நடத்துநர்கள் மூவர் மற்றும் காப்பாளர்கள் இருவர் அடங்குகின்றனர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

இதேவேளை, உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்று மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

## ஹெரோயின்...

யாழ். பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப் பதிகாரி, உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் கப்புலியத்த தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

குருநகர்ப் பகுதி தண்ணீர்த் தாங்கி வீதியி லுள்ள வீடொன்றில் வைத்து ஹெரோயின் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டார். இவரிடமி ருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. கைது செய்யப் பட்ட நபர் அப்பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ். மணியந்தோட்டம் பகுதியில் நுகர்வு மற்றும் விற்பனைக் காக ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த 3 பேர் கைது செய்யப்பட் டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் 21, 23, 28 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இவர் களிடமிருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

மேலும், யாழ். குருநகர்ப் பகுதியில் கடற்கரை வீதியில் விற்பனைக்காக வீடு ஒன்றில் பதுக்கி வைத்திருந்த கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து ஒரு கிலோ 370 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. பொலிஸாரை கண்டதும் கஞ்சாவை தீக்கிரையாக்க முற்பட்ட வேளை இந்த நபரை பொலிஸார் கைது செய்ததுடன் கஞ்சாவையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட நபர் அப்பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-03)

## நாட்டில்...

அதேபோல் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மின் தடை ஏற்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் மேலும் சில பகுதிகளிலும் முன்னறிவிப்பின்றி மின் தடை ஏற்பட்டது.

அனுராதபுரத்தில் அமைந்துள்ள பிரதான மின்மாற்றியில் ஏற்பட்ட கோளாறே இத் திடீர் மின்தடைக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

## மக்கள்....

சிறிஸ்கந்தராஜா பகீரதன் (வயது-40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வலிகாமம்....

மயிலிட்டியில் பல நூறு வருடங்களை பழைமையான வரசித்தி விநாயகர் ஆலயம் மற்றும் சென் மேரிஸ் தேவாலயம் ஆகியவை முற்றாக தரைமட்டம் ஆக்கப்பட்டு இராணுவ மாளிகை ஒன்று அவற்றின் மீது கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயமும் தேவாலயமும் அங்கே இருந்தனவா என்ற அடையாளமே தெரியாத அளவுக்கு அவை தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் 400 பேருக்கு சொந்தமான 60 ஏக்கர் காணியும் இந்த பங்களாவுக்காக இராணுவத்தினரினால் அபகரிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

இதேவேளை, வலிகாமத்தில் சில இடங்களை மீள குடியமர்வுக்காக இராணுவம் கடந்த ஆண்டுகளில் அனுமதித்துள்ளபோதிலும், அந்த பகுதிகள் தீவிர இராணுவமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது அப்பகுதி மக்களின் சகஜ வாழ்க்கையை மோசமாக பாதித்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை எல்லையுடனான தையிட்டி கிராமத்தில் கெமுனு விகாரை என்ற புதிய விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள இந்து கோவில் ஒன்றுக்கு சொந்தமான காணி ஒன்றிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கெமுனு விகாரையில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் 7 ஆவது பட்டாலியன் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இந்த 7 ஆவது பட்டாலியன் முகாமுக்கு பக்கத்தில் பிரபல்யமான ஊறணி அந்தோனியார் ஆலயமும் ஊறணி கனிஷ்ட வித்தியாலயமும் இருக்கின்றன. 7 ஆவது பட்டாலியன் முகாமில் இருந்து 1 கிலோ மீற்றர்கள் தொலைவில் இராணுவ பொலிஸாரின் முகாம் 15 ஏக்கர் தனியார் காணியில் அமைந்துள்ளது.

இராணுவ பொலிஸ் முகாமில் இருந்து ஏறத்தாழ 500 மீற்றர்கள் தொலைவில் மிகவும் விசாலமான 10 ஆவது கள பொறியியலாளார்கள் தலைமையகம் இருக்கிறது. இதன் அளவு 2000 ஏக்கர்களுக்கும் அதிகமானது. இது மயியிலிட்டியில் மட்டும் 8 கிராம சேவையாளர் பிரிவுகளை ஆக்கிரமித்துள்ளது. சுமார் 200 வருடங்கள் பழைமையான மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் இந்த முகாமை ஒட்டியபடி அமைந்துள்ளது. இந்த பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் இந்த முகாம் வேலியில் அமைக்கப்பட்டுள்ள வாசல் வழியாகவே செல்லவேண்டும்.

யுத்தம் முடியுவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ளபோதிலும், வலிகாமம் வடக்கில் இன்னமும் 3,300 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளது என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இரு தேர்தல்...

வருகிறது.

இதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் 340 சபைகளில் 200ற்கும் மேற்பட்ட சபைகளின் ஆட்சியை ஆளும் பொதுஜன பெரமுன பிடித்தது. அதேபோன்று இம்முறையும் வெற்றி பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் ஆளும் கட்சி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எனக்கு...

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய புலனாய்வுத் தகவலை எனக்கு அறிவித்திருந்தால் எந்த வழியிலேனும் தாக்குதலை தடுத்திருப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை குறித்து தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் விதமாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

சஹ்ரான் தரப்பினர் ஆயுத பயிற்சி எடுத்ததாக கூறப்படும் காலகட்டத்தில் அவற்றை கண்டறிந்து நடவடிக்கை எடுக் காதது ஏன் என்ற கேள்விகள் உள்ளன. எவ்வாறு இருப்பினும் தாக்குதலை அடுத்து பாராளுமன்ற தெரிவுக் குழு விசாரணைகள் நடத்தப்பட்டன.

அதனையும் தாண்டி ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆணைக்குழு தெரிவுக்குழுவின் விசாரணைகளையும் தாண்டி பல உண்மைகளை வெளிப்படுத்தும் என்றே கருதப்பட்டது.

சஹ்ரான் யார், அவருடன் நேரடியாக தொடர்புபட்ட நபர்கள் யார், ஐ.எஸ் அமைப்புடன் எவ்வாறு இவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தினர், இந்த தாக்குதலின் பின்னணி என்ன, இவையெல்லாம் வெளிவரும் என நினைத்தோம். ஆனால் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் அவை எதுவும் இல்லை. ஆழமான விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தால் ஆணைக்குழுவின் நோக்கமும் பயணமும் தெளிவாகியிருக்கும். ஆனால் ஆணைக்குழுவின் நோக்கம் என்ன என்பது தெளிவில்லை. ஆணைக்குழுவின் அறிக்கையும் தெளிவில்லை.

ஈஸ்டர் தினத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக இந்தியா வழங்கிய புலனாய்வுத் தகவலை எனக்கோ அமைச்சர்களுக்கோ தெரிவிக்கவில்லை. இதனை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நான் கூறினேன்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையிலும் அதனையே எடுத்துக் கூறினேன். எமக்கு அறிவித்திருந்தால் தடுப்பதற்கு ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுத்திருப்பேன்.

இந்தியாவின் புலனாய்வுத் தகவல்கள் ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ளன. தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் தகவல்களை கொடுத்துள்ளனர்.

அதற்கமைய எமது புலனாய்வுத் துறை செயற்பட்டிருந்தால் எம்மால் தாக்குதலை தடுத்திருக்க முடியும். எனினும் தாக்குதல் நடத்தப்பட்டு ஒன்பது மணித்தியாலங்களுக்குள் தாக்குதலுடன் தொடர்புபட்ட சகலரையும் கைது செய்யவும், நிலைமைகளை கட்டுப்பாட்டிற்கும் கொண்டுவரவும் முடிந்தது.

ஜனாதிபதி நாட்டில் இல்லாதபோதிலும் நான் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு செயற்பட்டதன் விளைவே அதுவாகும். இவ்வாறு துரிதமாக செயற்பட்டமை குறித்து வெளிநாட்டவர்கள் கூட ஆச்சரியப்பட்டனர் - என்றார். (அ-எ)

# தனிமைப்படுத்தலை மீறிய 3324 பேர் இதுவரை கைது

கொழும்பு,மார்ச்.09

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பில் நேற்றுத் திங்கள் கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 14 பேர் கைது செய்யப்பட்ட னர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் நேற்று வரை தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பில் 3324 பேர் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பான கண்காணிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

சமூக இடைவெளியைப் பேணாமை, முகக்கவசம் அணியாமை உள்ளிட்டவை தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.- என்றார். (எ)

## நல்லூர்...

தெரிவிக்கையில் அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என்பதனை தான் வலியுறுத்துவதாகவும் அதற்கான அழுத்தத்தை மக்கள் ஒழுங்கு செய்யும் சிறு சிறு போராட்டங்கள் ஊடாக பிரயோகிக்க முடியும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

## என்மீதான....

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தாக்குதல் நடத்தப்பட்ட வேளையில் நான் நாட்டில் இருக்கவில்லை.

அதுமட்டுமன்றி புலனாய்வுத் தகவல்கள் எனக்கு வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் பிரதான குற்றவாளிகள் எவரையும் கண்டறிய முடியாது போயுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராயவும் உண்மைகளைக் கண்டறியவும் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இப்போது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதில் உண்மையான காரணிகள் எதுவும் வெளிப்படவில்லை. மாறாக என்னைக் குற்றம் சுமத்தும் பரிந்துரைகளை ஆணைக்குழு முன்வைத்துள்ளது.

நாட்டில் குற்றச்சாட்டு சுமத்தப்படாத நபர் யார் உள்ளார்? எனவே இப்போது என்மீதும் அவ்வாறே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை நான் ஒருபோதும் கருத்தில் கொள்ளப்போவதில்லை-என்றார். (அ-எ)

## ஆண்டகை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கை, வடக்கு-கிழக்கு தமிழர் கள் தமது இழப்புகள் தொடர்பாக சர்வதேச நீதி விசாரணையைக் கோரும் நிலைப்பாட் டையும் பெரிதும் நியாயப் படுத்துவதாகவே காணப்படுகின்றது. 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் அன்றைய ஆட்சியாளர்களதும் மற்றும் பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களதும் அசமந்தப்போக்கு கரணமாகவே கொழும்பில் மட்டுமல்ல நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் ஏககாலத்தில் இடம் பெற்றிருந்தன.

எனவே, இலங்கையின் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமல்ல. சிங்கள பௌத்தர்கள் தவிர்ந்த ஏனைய சமூகத்தவர்களுக்கும் நீதி மறுக்கப்பட்டுள்ளதென்பதையே 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக கர்த்தினால் மல்கம் ரஞ்சித் விடுத்த எச்சரிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
09.03.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, மாசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சிவில் சமூகத்தினர் இனியாவது திருந்துவார்களா?

தற்போது இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரின்போது, இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் உள்ளடக்கம் தற்போது தெளிவாக தெரிந்துவிட்டது. இனியும் அது தொடர்பில் அறிக்கைகளை வெளியிடுவதோ அல்லது மாற்றங்களை செய்யுமாறு கோரிக்கைகளை முன்வைப்பதிலோ எதுவித பயனும் இல்லை. பூச்சிய வரைபு வெளியானதைத் தொடர்ந்து, அதில் ஒன்றில் சிறிய மாற்றங்கள் ஏற்படலாம் அல்லது மேலும் அது பலவீனப்படுத்தப்படலாம் என்னும் கணிப்பை 'ஈழநாடு' வெளியிட்டிருந்தது. தற்போது அதுவே நடந்திருக்கின்றது. தமிழரின் விருப்பங்களும் உலக அரசியல் போக்கில் இடம்பெறும் மாற்றங்களும் ஒரு நேர் கோட்டில் சந்திப்பதிலுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் 'ஈழநாடு' தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றது. அதிகம் நம்பிக்கைகளை வளர்ப்பதிலுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் 'ஈழநாடு' அவ்வப்போது எச்சரிக்கை செய்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வரவுள்ள பிரேரணைக்கு உறுப்பு நாடுகள் தமது ஆதரவை வழங்கவேண்டுமென்றும், அதனை தாமும் ஆதரிப்பதாகவும் அறிவித்திருக்கின்றது. வழமைபோல், கூட்டமைப்பின் பிரதான எதிர் கட்சியான - தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதனை விமர்சித்திருப்பதுடன், கூட்டமைப்பு மீண்டும் தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துவிட்டதாகவும் தெரிவித்திருக்கின்றது. இப்போதும் இதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை விளங்கிக்கொள்ளாமல், கூட்டமைப்பை விமர்சிக்கவேண்டுமென்னும் நோக்கத்தில் மட்டுமே முன்னணி செயற்பட்டிருப்பதாக தெரிகின்றது. உண்மையில், இந்தப் பிரேரணையை எதிர்க்க முடியும். நிராகரிக்க முடியும். பேரவையில் இதனை சமர்ப்பிப்பதை நாம் எதிர்க்கின்றோம் - எங்களுக்கு இவ்வாறானதொரு பிரேரணை தேவையில்லை என்றும் கூறமுடியும். இதனை ஏற்றுக்கொண்டு, இணைத்தலைமை நாடுகளும் இதனை நாம் கைவிடுகின்றோம் என்றும் கூறலாம் ஆனால் கேள்வி, இதன் பின்னர் அடுத்தது என்ன? தமிழ் மக்களுக்கு ஓரளவு ஆதரவாக இருந்த நாடுகளையும் புறம்தள்ளிவிட்டு தமிழர்கள் என்ன செய்வது? இதற்கு என்ன பதில்?

பேரவையிலிருந்து இந்த விவகாரத்தை வெளியில் எடுங்கள் என்றுதான் ராஜபக்ஷக்களின் அரசாங்கமும் கூறுகின்றது. இதனையே தமிழர்களும் கூறமுடியுமா? ஆனால், கூட்டமைப்பின் பக்கத்திலும் ஒரு தவறுண்டு. அதாவது, இதனை ஆதரிக்கும்போது, சில விடயங்களை குறிப்பிட்டுவிட்டு ஆதரித்திருந்திருக்கலாம். ஆனால், இந்த விடயத்தின்போது பிறிதொரு விடயத்தை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருப்பது முக்கியமானது. இனிமேல் ஒற்றுமையென்னும் பெயரில், கூட்டமைப்புடன் எங்களை இணைக்கும் முயற்சிகளை சிவில் சமூகத்தினர் - மதத் தலைவர்கள் கைவிடவேண்டும். இனி இதுதொடர்பில் எங்களை அணுகக்கூடாது. இதனை அவர் ஓர் எச்சரிக்கையாகவே முன்வைத்திருக்கின்றார். இதன்மூலம், சிவில் சமூகமென்னும் பெயரில் மேற்கொள்ளப்படும் விடயங்கள் பயனற்றவை என்பதையும், அவர் மறைமுகமாக சுட்டிக் காட்டியிருக்கின்றார். தமிழ் சிவில் சமூகம் என்னும் பெயரில் இயங்குபவர்கள், இதில் தங்களை இணைத்துக்கொள்வதில் முன்னுக்குவரும் மதத் தலைவர்கள் என்போருக்கு இது ஒரு தெளிவான செய்தியை கொடுத்திருக்கின்றது. அதாவது, இனியும் தேவையற்ற வேலையில் ஈடுபடாதீர்கள் என்பதுதான் அந்தச் செய்தி. அதேவேளை, ஒற்றுமை என்னும் பெயரில் பிழையான - மக்களுக்கு விரோதமான - வேலைகளையே இவர்கள் இதுவரையில் செய்திருப்பதான ஒரு தகவலும் இதற்குள் தொக்கிநிற்கின்றது. அப்படியும் இதனை விளங்கிக்கொள்ளலாம்.

இது தொடர்பில் சிவில் சமூகமென்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் பதிலளிப்பார்களா? தாங்கள் தவறான ஒன்றிற்காகவே முயன்றதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வார்களா? இனி, பதிலை அவர்கள்தான் கூறவேண்டும். ஒருவேளை, அவர்கள் பதிலிளிக்க மறுத்தால், பொன்னம்பலம் அணியினர் கூறுவதுதான் சரியான கருத்தாக விளங்கிக்கொள்ளப்படலாம்.

# ஆண்டகை கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் 'கர்ச்சனை'!

- அலசுவது இராஜதந்திரி -



1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் இலங்கைக்கு விஜயம்செய்த போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்புவரை வழி நெடுகிலும் அவருக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில், கொழும்பிலிருந்து சிலாபம் வரையிலான மேற்குக்கரையோரம் கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

வத்திக்கானிலிருந்தே கொண்டுவரப்பட்ட குண்டு துளைக்காத கண்ணாடிப் பேழையினாலான தமது வாகனத்தில் நின்றவாறே பரிசுத்த பாப்பரசர் வழிநெடுகிலும் நின்ற மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கியவாறு பயணித்திருந்தார். அப்போது பரிசுத்த பாப்பரசருக்கு பாதுகாப்பு வழங்கிய இலங்கை மெய்பாதுகாப்பாளர் அணிக்கு தலைமை தாங்கியவர், தமிழரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அன்டன் ஜெயநாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசுத்த பாப்பரசரின் வாகன ஊர்வலம் கொழும்புக்குள் நுழைந்ததும், கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய வீதியூடாக கொழும்பின் காலிமுகத்திடலை அடையும் விதத்திலேயே போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

**பாப்பரசரின் வழிபாடு**

இந்நிலையில், பரிசுத்த பாப்பரசரின் வாகனம் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய முன்றலை நெருங்கியபோது, எவருமே எதிர்பார்க்காத விதத்தில் குறிப்பாக, பரிசுத்த பாப்பரசரின் மெய்ப்பாதுகாப்பாளர்களே வியக்கும் விதத்தில் தமது வாகனத்தை அந்தோனியார் தேவாலய வாசலில் நிறுத்தும்படி பாபபரசர் தம்மருகே நின்று கொண்டிருந்தவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அப்போது அவரது வாகனம் தேவாலய முன்றலில் நிறுத்தப்பட்டதும், பாப்பரசர் உள்ளே இறங்கிச்சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டார். எவருமே எதிர்பார்க்காத விதத்தில் பாப்பரசர் இவ்வாறு நடந்துகொண்டமை, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் மகிமையை மேலும் சிறப்படைய வைப்பதாக அமைந்திருந்தது.

இருந்தபோதிலும், பாப்பரசர் வழிபாடு செய்த கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், அவர் அங்கு விஜயம்செய்து இருபத்தினான்கு வருடங்களின் பின்னர், 2019ஆம் ஆண்டில் பயங்கர தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு, புனித உயிர்த்த ஞாயிறு தினமொன்றில் இலக்காகி, ஏராளமானவர்களைப் பலியெடுக்கும் என்று எவருமே கனவில்கூட நினைத்துப்பார்திருக்க மாட்டார்கள்.

**தலைநகர் கொழும்பு**

சர்வதேச ரீதியாக பார்க்குமிடத்து, உலகில் அதிகளவு மோசமான குண்டுத் தாக்குதல்களை சந்தித்த ஒரு தலைநகரமாகவே கொழும்பு விளங்குகின்றது. வடக்கு-கிழக்கு யுத்தம் முறுக்கேறியிருந்த காலப்பகுதியில் அதிகளவான குண்டுத் தாக்குதல்கள் கொழும்பு நகரை கதிகலங்க வைத்திருந்தன.

இருந்தபோதிலும், வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்குவந்து பத்து வருடங்களின் பின்னர் கொழும்பில் இடம்பெற்ற மிக மோசமான குண்டுத் தாக்குதலாகவே கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விளங்கியிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் கத்தோலிக்க மதத்தலைவரான ஆண்டகை கர்த்தினால் மல்கம் ரஞ்சித், குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற அந்தோனியார் தேவாலயத்துக்கு வெளியே, 2019ஆம்ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று எச்சரித்திருந்தார். அத்துடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு, சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடில் கடுமையான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ளப்போவதாகவும் குறிப்பிட்டிருந் தார். ஆண்டகை கர்த்தினால் மல்கம் ரஞ்சித் இவ்வாறு விடுத்த எச்சரிக்கை, இலங்கையில் சட்டம் ஒழுங்கு, நீதி நியாயம் என்பவை எவ்வளவுதூரம் புறக்கணிக்கப்பட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்டுவதாகவே இருக்கின்றது.


**ஜெனிவா கூட்டத் தொடர்**

அதேவேளை, தற்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இடம்பெற்றுவரும் 46ஆவது கூட்டத்தொடரின் பின்னணியில், இலங்கையில் 2019ஆம்ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் உண்மைத் தன்மைகூட பிரதிபலிக்குமென்றே எதிர்பார்க்கமுடியும். கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஏற்கனவே சில வாரங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக நீதி நியாயம் கிடைக்காவிடில், சர்வதேச சமூகத்தை தாம் நாடவேண்டியிருக்குமென்றும் எச்சரித்திருந்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் இந்த

(02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
தேவையற்ற விஷயங்களை நினைத்து குழம்ப வேண்டாம். சில நல்ல காரணங்களுக்காகப் பணம் நிறைய செலவாகும். கடந்த இரண்டு நாளாக இருந்த கவலைகள் தீரும்.

**இடபம்**
எண்ணிய திட்டம் ஒன்று விரைவில் கைகூடும். நீங்கள் முன்பு செய்த தவறுக்கு இன்று வருந்தும்படி ஆகும். பெரிய முன்னேற்றம் எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை.

**மிதுனம்**
அலுவலகச் சூழல் திருப்திகரமாக இருக்கும். முன்னேற்ற வாய்ப்புகள் பெருகும். மனபாரம் குறையும். பொருளாதார பிரச்னைகள் விலகும். பலரை சந்திப்பீர்கள்.

**கடகம்**
சிறியதோர் திருப்புமுனை ஏற்படும். கூடுதல் வருமானம் வரும். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் நல்லபடி நிறைவேறும். சந்திக்கும் புதியவர்களில் ஒருவரால் நன்மை விளையும்.

**சிம்மம்**
செலவுகள் காத்துக் கொண்டு இருக்கும். பயணங்கள் ஏற்பாடாகும். நிம்மதி அதிகரிக்கும். தேவையற்ற பயத்தை உதறுவது நல்லது. முக்கிய முடிவுகள் எடுப்பதில் தாமதிக்க வேண்டாம்.

**கன்னி**
கையில் பணம் புரளும். ஆரோக்யம் பற்றிய அக்கறை கூடும். சிறுவயதில் பழகிய நண்பர்களைச் சந்தித்துப் பேசுவீர்கள். உறவினர் வருகை காரணமாக ரகசியம் ஒன்றை அறிவீர்கள்.

**துலாம்**
உடன்பிறப்பு மூலம் கவலை தீரும். நட்பால் நன்மை விளையும். கவரும் தன்மை அதிகரிப்பதால் செல்வாக்கு கூடுதலாகும். பிள்ளைகளின் செயல்பாடுகள் பெருமிதத்தை தரும்.

**விருட்சிகம்**
சிறிய அளவில் மருத்துவ செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலில் சுமார் லாபம் உண்டு. கவலைகள் நீங்கும். முழு கவனம் செலுத்தி எதையும் செய்து வெல்வீர்கள்.

**தனுசு**
தடை தாமதங்களைப் பொருட்படுத்தாமல் முன்னேறுவீர்கள். கடந்த நாட்களில் இருந்ததைவிட நிலைமை சீரடையும். சிறிய பழுதுகள் வருவதால் மின் சாதனங்களை வாங்குவீர்கள்.

**மகரம்**
பேச்சிலும், செயலிலும் வேகமும், விவேகமும் இருக்கும். ஆன்மிக நாட்டம் உண்டாகும். பொதுப் பணியில் ஈடுபடுவீர்கள். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை முன்னேற்றம் தரும்.

**கும்பம்**
வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள். குடும்பத்தில் சிறிய அளவில் மாற்றமும், முன்னேற்றமும் வரும். மனநிம்மதி கிடைக்கும். நல்லோர் தொடர்பு கிடைக்கும்.

**மீனம்**
ஏற்ற இறக்கமான நிலை இருக்கும். மன சஞ்சலம் தீரும். ரகசியங்களை வெளியில் சொல்வதை தவிர்ப்பது நல்லது. உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் கூட நண்பர்களாக மாறுவர்.

# ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டோர் அரசுடன் இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## - வலியுறுத்துகின்றார் விமல் வீரவன்ஸ -

கொழும்பு, மார்ச் 09,

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் அரசாங்க தரப்பில் இருந்தாலும் கூட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்கவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு கடந்த நல்லாட்சி அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தையே ஒப்படைத்திருந்தது. அந்நிலையில் எமது நாடு உள்ளடங்கலான உலக நாடுகளில் கொரோனாவைரஸ்தொற்று பரவல் நிலைமை ஏற்பட் டது. அந்த சவாலையும் சிறந்த முறையில் எதிர்கொண்டுள்ளோம். அத்தடன், நாட்டின் தேசிய பொருளதாரத்தை வலுவடைய செய்வதை நோக்காக கொண்டு அதற்கான நடவடிக்கைகளையும் உரிய முறையில் மேற்கொண்டுள்ளோம்.

அந்த வகையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தேங்காயின் விலை அதிகரித்த மட்டத்தில் காணப்பட்டது. ஆனால் தற்போது தேங்காய் உற்பத்தி உரிய முறையில் இடம் பெற்று வருகின்றமையினால், தற்போது தேங்காய் விலை குறைந்துள்ளது. அவ்வாறாக காலத்திற்கு காலம் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஆனால் உலகளாவிய ரீதியில் உற்பத்தித்தட்டுப்பாடு மற்றும் கேள்விக்கு ஏற்ற வகையில் பொருட்கள் கிடைக்கப்பெறுவதில் தட்டுப்பாடும் காணப்படுகின்றது. இத்தகைய சவாலை எமது நாடு மாத்திரமல்ல உலக நாடுகள் அனைத்தும் எதிர்கொண்டுள்ளன.

இதன் காரணமாக அனைத்து நாடுகளிலும்பொருட்களின்விலை அதிகரித்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதன் காரணமாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே அவர்களுக்கான நிவாரணத்தை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தினர் தற்கொலை குண்டுதாரிகளான இஸ்லாமிய இனவாதிகளுக்கு இடமளித்து தாக்குதல்கள் இடம் பெறும் வரை பார்த்துக்கொண்டிருந்தனர்.

இதன்காரணமாகவே கத்தோலிக்கர்களுக்கு கறுப்பு ஞாயிறு தினத்தைபிரகடனப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன், தமக்கு ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்பு கூறவேண்டியவர்களுக்கான உச்சகட்ட தண்டனையையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகவே தான் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்குமாறு கூறுகின்றனர். அவர்களுக்கான நீதி கிடைக்கப்பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கான முன்னெடுப்புக்கள் முழுமையாக நிறைவடையவில்லை.

அத்துடன், அவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் நேரடியாக தலையிட்டு குற்றம் இழைத்தவர்கள் அரசாங்கத்தினுள்ளோ, வெளியிலோ இருந்தாலும் அவர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்களுக்கு நீதி கிடைக்கப்பெறவேண்டியது அவசியமானதாகும்” எனவும் தெரிவித்தார்.

# சிறைக் கைதிக்கு சட்டக் கல்லூரி மாணவர் கைபேசி கொண்டுசென்று கொடுத்தாரா?

## - உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்கிறார் சுதந்த தேரர்

கொழும்பு, மார்ச் 09,

சட்டக்கல்லூரி மாணவரொருவர் சிறைக்கூட்டினுள் கைத்தொலைபேசியை எடுத்து சென்று கைதிக்கு வழங்கிய விவகாரம் தொடர்பிலான உண்மைத் தன்மை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும் என சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“முன்னாள் ஆளுனர் மைத்திரி குணரட்ணவின் மகன் சட்டக்கல்லூரி மாணவராக இருக்கும் நிலையில் சந்தேக நபரொருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூட்டிற்கு உணவுப்பாசல் ஒன்றை எடுத்து சென்றுள்ளார். அது மாத்திரமல்லாது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு தன்னுடைய கையடக்க தொலைபேசியை கொடுத்துள்ளார். இந்த சம்பவத்தின் காரணமாக அதிகாரிகள் சிலரே தண்டிக்கப்பட்டுள்ளனர். குறித்த அதிகாரிகள்நாட்டிற்காக பாரிய அளவில் சேவையாற்றியவர்கள் ஆவர்.

அந்த வகையில் பாதாளக் குழுக்களை முறியடித்தல், போதைப் பொருள் கடத்தலை தடுத்தல் மற்றும் சட்டவிரோத ஆயுதக்கடத்தலுக்கு எதிரான சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்களை தமது உயிரை பணயம்வைத்து நாட்டிற்காக செயலாற்றியுள்ளனர். ஆனால் சட்டக்கல்லூரி மாணவன் செய்த குற்றத்திற்காக இந்த அதிகாரிகளை வேட்டையாட எண்ணுவது முறையற்ற விடயமாகும். அதேபோல் இந்த அதிகாரிகளை அரசியல் ரீதியில் வேட்டையாடி அவர்களுடைய வேலையை தடைசெய்தும் உள்ளனர்.

அதற்கு மேலதிகமாக குறித்த அதிகாரிகளை கைது செய்வதற்காக சட்டமா அதிபரினால் ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். உண்மைக்கு புறம்பான தகவல்களே நாட்டு மக்களிடம் சென்றடைந்துள்ளன. ஆகவே உண்மை தகவல்களை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு ஊடகங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்” என அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் மகளிர் தினம்

மன்னார், மார்ச் 09

மன்னார் மாவட்ட உள்ளூராட்சிமன்றப் பெண் உறுப்பினர் களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இடம் பெற்றது.

மன்னார் நகர சபை உறுப்பினர் சி.அந்தோனியம்மா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட் டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும், மாவட்டத்தில் பெண்களுக்கான முன்னெ டுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், பெண் பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் மன்னார் மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண் உறுப் பினர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிர தேச சபை, முசலி பிரதேச சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங் களையும் உள்ளடக்கி 20 பெண் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஈழநாடு






# தீப்பந்தங்கள் ஏந்தி யாழில் போராட்டம்

## தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து நடத்தப்பட்டது

**யாழ்ப்பாணம், மார்ச் 09**

**இலங்கை அரசால் தமிழ்ப்பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டி, சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12 மணிக்கு நல்லூர் பின் வீதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் மத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்கள், மாணவர்கள், பொது மக்கள்என பலர் கலந்துகொண்டனர்.



இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக்கோரி பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் இணைந்து வடக்கு, கிழக்கில் சுழற்சிமுறை உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 4 வருடங்களைக் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதேபோன்று தமிழரின் உரிமைகளுக்காக மேலும் பல தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நீதிக்காக போராடும் இனத்தின் கோரிக்கைகளை ஐ.நா. கவனத்தில் எடுத்து செயற்படவேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டார் நாமல்

## விமானமொன்றின் சேவை 45 நிமிடங்கள் தாமதம்

*கொழும்பு, மார்ச் 09*

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் விமானமொன்றின் சேவை, 45 நிமிடங்கள் தாமதப்படுத்தப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுதுறை அதிகாரிகளுக்கு, நாமலுக்கு நீதிமன்றம் விதித்த பயணத் தடையை நீக்குவது குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைச்சர் நாமல் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளை சுமார் 45 நிமிடங்கள் தாமதப்படுத்தவேண்டிய சூழ் நிலை ஏற்பட்டிருந்தாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு- கோட்டை நீதவான் நீதிமன்றம், நாமல் ராஜபக்ஷ மீது இரண்டு பயணத் தடைகளை பிறப்பித்திருந்தது. இவை இரண்டும் கடந்த 4 ஆம் திகதி நீக்கப்பட்டன.

இதனை நீதிமன்றப் பதிவாளர் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறைக்கு தபால் மூலம் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வெளிநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொள்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றிருந்தார்.

குறித்த தருணத்தில், கட்டுநாயக்க விமான நிலையம், நீதிமன்றம் இரத்து செய்திருந்த உத்தரவைப் பெறவில்லை. இதனால் அதிகாரிகள், நாமல் ராஜபக்ஷவை வெளிநாடு செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளர், கட்டுநாயக்க விமான நிலையக் குடிவரவுத்துறை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, நாமலுக்கு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளமை குறித்து அறிவித்தார்.

அதன் பின்னர், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினருடன் எமிரேட்ஸ் விமானம் முற்பகல் 10.45 மணியளவில் டுபாய்க்கு புறப்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் கூறின.

# தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து மலையக மக்கள் முன்னணி ‘அவுட்’?

*கொழும்பு, மார்ச் 09*

தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து வெளியேறுமாறு மலையக மக்கள் முன்னணிக்கு, அக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் இதர பங்காளிக்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவற்றின் தலைவர்களே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

20 இற்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை, தன்னிச்சையான வகையில் சில முடிவுகளை எடுத்தமை, ஆளுங்கட்சியுடன் உள்ள இரகசிய உறவு உட்பட சில விடயங்களைக் கருத்திற்கொண்டே அந்தக் கட்சியை வெளியேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மாகாணசபைத் தேர்தலில் கூட்டணியின் வேட்பாளர்களை மனோவும், திகாவுமே தீர்மானிப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓ.எல். மாணவர்களுக்கு அரசு கடும் எச்சரிக்கை!

*கொழும்பு, மார்ச் 09*

2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்காக, பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

எதிர்வரும்10 ஆம் திகதியுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடையவுள்ளது. எனவே, பரீட்சை நிறைவடைந்தவுடன் அமைதியான முறையில் கலைந்து செல்லுமாறு, பரீட்சைகள் திணைக்களம் மாணவர்களை கேட்டுள்ளது.

அதாவது, பரீட்சை முடிந்தவுடன் பரீட்சை நிலையங்களிலோ அல்லது பரீட்சை நிலைய வளாகத்திலோ அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல், ஏனைய மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகை யில் செயற்படுதல் மற்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால், பரீட்சைச் சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை வழங்கப்படும் என திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு செயற்படுவோரின் பரீட்சைப் பெறுபேறுகளை இரத்துச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மகளிர் தினத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்

*வவுனியா, மார்ச் 09*

சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அவர்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் பந்தலுக்கு முன்பாக கவன வீர்ப்பு போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்கள்-

எமக்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து தாய்மார்களும் ஒன்றிணைந்து போராடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எமது தாய்மார்களின் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்றுடன் 1480 ஆவது நாளை கடக்கின்றது. அது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தங்கள் இலக்கை அடைவதற்கான மன வலிமையையும், உறுதிப்பாட்டுடனான, தன்னம்பிக்கை இருப்பதையும் காட்டுகிறது.

உலக வரலாற்றில், வவுனியாவில் உள்ள




இந்த தமிழ் தாய்மார்களின் 4 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்த போராட்டம் உலக சாதனையை படைத்து வருகின்றது. அவர்களின் போராட்டத்தில் அவர்கள் பெற்ற வலிமைக்கும், அவர்களின் அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் நாங்கள் அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறோம்.

அத்துடன் ஐ.நாவின் இரண்டாவது வரைவு நல்லதல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். இது வாக்கெடுப்பு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் ஐ.நா அமைதி காக்கும் படை ஆகியவற்றை சேர்க்கத் தவறிவிட்டது. அத்துடன் எமக்கான தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து தாய்மார்களும் ஒன்றினைந்து போராடவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது-என்றனர்.

# 2022 மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி தேர்தல்!

## அரசு வட்டாரங்களில் இருந்து தகவல்

கொழும்பு, மார்ச் 09

**உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை 2022 மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

23 மாநகரசபைகள் உட்பட 335 உள்ளூட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2018 பெப்ரவரியில் நடைபெற்றது.

குறித்த சபைகளின் பதவிக் காலம் அடுத்த வருடம் ஜனவரியில் முடிவுக்கு வருகின்றது.

இந் நிலையிலேயே தேர்தலை ஏப்ரல் மாதத்துக்குள் அதாவது மார்ச் மாதமளவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு கலப்பு முறையிலேயே உள்ளூராட் சிமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன் மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டதுடன், பெண் பிரதி நிதித்துவமும் கட்டாயமாக்கப்பட்டது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமையில் சில குளறுபடிகள் உள்ளன. இதனால் ஸ்தீரமற்ற ஆட்சியும் அமைக்கின்றது. எனவே, சில திருத்தங்களுக்கு மத்தியிலேயே தேர்தல் இடம்பெறும்.

# மைத்திரிபாலக்கு எதிராக வழக்கு தொடுக்கக்கூடாது

## அபயதிஸ்ஸ தேரர் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 09

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்ற வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற கருத்தை நிராகரிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவான மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசாங்கத்துக்குள் பிரச்னை இருந்தது. அவரை சுந்திரமாக இயங்கவிடவில்லை. அப்படி இருக்கையில் அவர் மீது குற்றம் சுமத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்ளக பிரச்னை காரணமாகவே 52 நாட்களுக்கு மஹிந்த பிரதமராக செயற்பட்டார் என அபயதிஸ்ஸ தேரர் கூறினார்.

இந்த அரசாங்கத்துக்கு பொறுப்பு செயற்படுத்தல் மாத்திரமே இருப்பதாகவும் குற்றங்களை ஏற்று பொறுப்புக்கூறவேண்டிய அவசியம் இல்லை எனவும் தேரர் குறிப்பிட்டார்.

# சீனி இறக்குமதியில் 10 பில்லியன் மோசடி

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 09

மத்தியவங்கி பரிவர்த்தனைகள் நிறுத்தப்பட்டுள்ளபோதும் தற்போதைய அரசாங்கம் விசாரணையைத் தொடங்கத் தவறிவிட்டது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நடவடிக்கை தற்போது சீனி இறக்குமதியில் 10 பில்லியன் ரூபா மோசடிக்கு வழிவகுத்தது என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். தம்புள்ளையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மத்தியவங்கி முறிகல் மோசடி குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது குறித்த பரிவர்த்தனையை ரணில் விக்ரமசிங்க நிறுத்தி வைத்தார்.

இந்நிலையில் பத்திரங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிதிகளும் இன்றுவரை மத்திய வங்கியில் உள்ளன என ருவான் விஜேவர்தன கூறினார்.

எவ்வாறாயினும், சீனி இறக்குமதியில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக இதேபோன்ற நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது என அவர் குற்றம்சாட்டினார்.

# முக்கிய பரீட்சைகள் பிற்போடப்படும் நிலை

கொழும்பு, மார்ச் 09

திட்டமிடப்பட்டபடி பாடத்திட்டத்தை நிறைவுசெய்ய முடியாதுள்ள நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயரதரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையை தாமதப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல், பரீட்சைகள் திணைக்களம், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் இடையே நடைபெற்றதாகக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இதுவரை உள்ளடக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் பிரச்னை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பாடசாலை மட்டத்தில் மேலதிக தகவல்களை சேகரித்த பின்னர் இறுதி முடிவு எட்டப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.த. உயரதரப்பரீட்சை மற்றும் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பன ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்றுவரும் நிலையில் மாற்றம் இந்த அறிவிப்பை கல்வி அமைச்சு விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாகிஸ்தானிலிருந்து போதைப்பொருடன் வந்த மூன்று இலங்கைப் படகுகள் சிக்கின

கொழும்பு, மார்ச் 09

பாகிஸ்தானிலிருந்து பெருமளவு போதைப்பொருட்களை கொண்டுவந்த இலங்கையைச் சேர்ந்த மூன்று படகுகளை கைப்பற்றியுள்ளதாக இந்திய கடலோரக்காவல்படை அறிவித்துள்ளது.

கேரளக்கடல்எல்லையில்நேற்று முன்தினம் அதிகாலை விழிஞ்சம் கடலோரப் பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது 3 படகுகள் சந்தேகத்திற்கு இடமான வகையில் சென்று கொண்டு இருந்தன. அந்த படகுகளை சோதனை செய்தபோது, அதில் ஹெரோயின்,ஹாபிஸ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த படகுகள் இலங்கையை சேர்ந்தவை என்பதும், போதைப் பொருட்களை பாகிஸ்தானில் இருந்து கடத்தி வருவதும் தெரிய வந்தது. 3 படகுகளில் 19 பேர் இருந்தனர். இதற்கிடையே படகில் இருந்த 200 கிலோ ஹெரோயின், 60 கிலோ ஹாபிஸ் பைக்கட்டுகளை அவர்கள் கடலில் வீசினர். தொடர்ந்து 3 படகுகளையும் கடலோரப் பாதுகாப்புப் படையினர் விழிஞ்சம் துறைமுகத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.



# டிக்கோயாவில் மினி சூறாவளி!

## 23 வீடுகளுக்கு சேதம்

கொழும்பு, மார்ச் 09

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கலை மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று முன் தினம் மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக அந்த தோட்டத்தில் உள்ள 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

கடும் காற்று காரணமாக இந்த தோட்டத்தில் உள்ள 15ஆம் இலக்க தொடர் குடியிருப்பின் கூரை காற்றினால் அள்ளூண்டு சென்றுள்ளது. இதனால் இந்த குடியிருப்பில் 16 வீடுகளுக்கு மழையால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கூரைத்தகரங்களும் சேதமடைந்துள்ளன.

இதே நேரம் அந்தப் பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்ததன் காரணமாக ஒரு வீட்டின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் இரண்டு வீடுகளின் கூரைத்தகடுகள் சேதமடைந்துள்ளன.

இதே பகுதியில் அமைந்துள்ள மற்றுமொரு தொடர்மாடிக் குடியிருப்பில் சில வீடுகளின் கூரை சேதமடைந்துள்ளன. இந்தப் பகுதியில் சுமார் 50 மேற்பட்ட மரங்கள் மினி சூறாவளி காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளன.

# கொழும்பு மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு கொடுத்தது ஏன்?

## அஜித் பி பெரேரா கேள்வி



கொழும்பு, மார்ச் 09

ஏனைய முதலீட்டாளர்களுக்கான விலைமனு கோரல் எதுவும் இன்றி அதானி நிறுவனத்துக்கு கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் அபிவிருத்தி வழங்கப்படுவதற்கான பின்புலம் என்ன என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பில் தகவல் வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு முனையத்தைப் போலவே மேற்கு முனையமும் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும்கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியாவுடன் ஏற்பட்ட விரிசலால் தற்போது மேற்கு முனையத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பின்போது மேற்கு முனைய அபிவிருத்தியை அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல கூறினார். எனினும் அவரால் கூறப்பட்ட விடயம் உண்மைக்கு புறம்பானதென இந்தியா அறிவித்துள்ளது.

இதன் மூலம் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தவறானது என்பது தெளிவாகிறது. மேற்கு முனைய அபிவிருத்தி ஏனைய முதலீட்டாளர்களுடனான விலைமனு கோரலின்றி அதானி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதானி நிறுவனம் உலகின் பல நாடுகளிலுள்ள நிறுவனங்களுக்கு இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ஒரு நிறுவனமாகும். இதன் காரணமாகவே இந்திய அரசாங்கம் இந்த விவகாரத்துக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் , இலங்கை அரசாங்கமும் அதானி நிறுவனமும் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளது என்றும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜப்பான் இதுவரை தமது முதலீட்டாளர்களை அறிவிக்கவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது. இவ்வாறிருக்கையில் அவசர அவசரமாக அதானி நிறுவனத்துக்கு வழங்குவதன் பின்புலம் யாது ? இவ்வாறுதான் கொழும்பு துறைமுகத்தின் தென் முனையம் மற்றும் அம்பாந்தோட்டை என்பவற்றுக்கு தாரை வார்க்கப்பட்டன-என்றார்.

# இலங்கைக்கு ஆதரவளிக்கக்கூடாது என பலம் பொருந்திய நாடுகள் அச்சுறுத்தல்!

### அரசு பகிரங்கக் குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 09**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருக்க, பலமான நாடுகள் ஏனைய உறுப்பு நாடுகளை அச்சுறுத்துகின்றன என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பலம் வாய்ந்த நாடுகள், உறுப்பு நாடுகளுக்கு நிதியுதவி மற்றும் கடன்களை வழங்குவதன் ஊடாக இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதை அச்சுறுத்துகின்றன.

இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள 21 நாடுகளில் ஒரு மேற்கு நாடேனும் இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபை மேற்குலக நாடுகளுக்குச் சார்பான அமைப்பாகும்.

இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட பிரேரணை நகல் இணை அனுசரணை நாடுகளால் அதிகார பூர்வமற்ற கலந்துரையாடலுக்காக முன்வைக்கப்படவுள்ளது.

குறித்த பிரேரணையை இணை அனுசரணை நாடுகள் இருபக்க ஒத்திசைவுடன் நிறைவேற்ற எதிர்பார்த்திருந்தாலும், இலங்கை வாக்கெடுப்புக்குச் செல்லத் தீர்மானித்துள்ளது.

கொரோனா மரணங்களை அடக்கம் செய்யும் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமக்கு இருந்த 10 வாக்குகளை 15 வரை அதிகரிக்கச் செய்யும்.

ஐ.நாவில் இலங்கை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 20 அல்லது 21ஆம் திகதிகளில் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கு ஏற்ற விதத்தில் நாம் தயார்படுத்தல்களை மேற்கொள்கின்றோம்-என்றார்.



# "நாடும் தேசமும் உலகமும் அவளே" தொனிப்பொருளில் மகளிர் தினம்

### யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 09

'நாடும் தேசமும் உலகமும் அவளே ' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றன.

நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பெண் தொழில் முயற்சியாளர்களது உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவச் சிப்பாய் தாக்கியதாக இளைஞர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 09

இராணுவச் சிப்பாய் தாக்கினார் எனத் தெரிவித்து இளைஞர் ஒருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த சிவலிங்கம் கமில்தாஸ் (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு சிகிச்சைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, இராணுவத்தினர் தன்னை வழிமறித்துத் தாக்கியதாக இளைஞர் வைத்தியசாலையில் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

# வெளிநாடுகளிலிருந்து வந்த 22 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, மார்ச் 09

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய அதிகமான இலங்கையர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று காலை 06 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் இலங்கையில் கண்டறியப்பட்ட 359 பேரில் 22 இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் மட்டும் 9 ஆயிரத்து 575 பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொண்டதை அடுத்து, இவர்களைத் தவிர்த்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 337 கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

அவர்களில 77 பேர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பு மாவட்டத்தில் 74 பேர், காலி மாவட்டத்தில் 34 பேர், நுவரெலியா மாவட்டத்தில் 18 பேர், யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட் டங்களில் 17 பேர் நேற்றுமுன்தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் பதுளை மாவட்டத்தில் 10 பேர், இரத்தினபுரி மாவட்டத்தில் 15 பேர், மொனராகலை மாவட்டத்தில் 13 பேர், கேகாலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 12 என்ற அடிப்படையில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 09 பேர், அனுராதபுரம் மாவட்டத்தில் 08 பேர், களுத்துறை மாவட்டத்தில் 07 பேர், புத்தளம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தலா 06 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# பருத்தித்துறையில் பெண் கொரோனாவால் மரணம்!

### உடலை மின்தகனம் செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்இ மார்ச் 09

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் உள்ள கொவிட் -19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று நேற்று முன்தினம் வீடு திரும்பிய வயோதிபப் பெண் மறுநாளான நேற்று உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு கொவிட் -19 நோய்த் தொற்றுக் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் கொவிட் -19 விதிமுறைகளுக்கு அமைய நேற்று யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டது.

ஆசிரியை ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவரது குடும்பத்தவர்களுக்கு ஏற்பட்ட தொற்றில் பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

பருத்தித்துறை தும்பளை தெற்கைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த 23ஆம் திகதி கொவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. அவர் நொச்சிகாமம் கொவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியற் கல்லூரியில் அமைந்துள்ள கொவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார். எனினும் நேற்று அவர் கவலைக்கிடமான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவத்தை அடுத்து சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி அவர் கொவிட் -19 நோயால் உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையிட ப்பட்டுள்ளது. அதனால் வயோதிபப் பெண்ணின் சடலத்தை மின்தகன மைதானத்தில் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாவது கொவிட் -19 நோயாளி உயிரிழப்பு இதுவாகும். (2)

# மேல்மாகாண பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டன

கொழும்பு, மார்ச் 09

மேல் மாகாணத்திலுள்ள அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் முன்னர் அறிவித்தது போல் எதிர்வரும் 15ஆம் திகதி கற்றல் நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான முதல்கட்ட கல்வி நடவடிக்கைகள்கடந்த பெப்ரவரி மாதம்15ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம், எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

# 'ஸ்புட்னிக் வீ' தடுப்பூசிக்காக ரஷ்யாவுக்கு இலங்கை கடிதம்

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் அவசர தேவை நிமித்தம் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வீ தடுப்பூசியை பெற்றுக்கொள்வது தொடர்பில் ரஷ்ய அதிகாரிகளுக்கு அரசாங்கம் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக ராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் நடவடிக்கை குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் ராஜாங்க அமைச்சர் இதனை கூறினார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வீ கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கான நிதி உள்ளதாக குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்று அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் இதுவரை 7 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் சுமார் 5 லட்சம் பேர் நாட்டில் கொரோனா தொற்று அபாய வலயங்களில் வசிப்பவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.





# திண்டாடும் பிரிட்டிஷ் அரச குடும்பம்!

## இளவரசர் ஹரி - சீமாட்டி மேகன் அதிர்ச்சிப் பேட்டி

பிரபல அமெரிக்க தொலைக்காட்சியான சிபிஎஸ் ப்ரைம்டைம் ஸ்பெஷல் என்ற நிகழ்ச்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளர் ஓப்ரா வின்ப்ரே நடத்திய நேர்காணலில் பிரிட்டிஷ் இளவரசரும் சஸ்செக்ஸ் கோமகனுமான ஹரி மற்றும் அவரது மனைவியும் சீமாட்டியுமான மேகன் மார்கல் வெளியிட்டு வரும் நேர்காணலில் வெளியிடும் விவரங்கள் பேசுபொருளாக மாறியுள்ளன.

பிரிட்டன் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதாக கடந்த ஆண்டு தொடக்கத்தில் அறிவித்த இளவரசர் ஹரி, மேகன் மார்கல் ஆகியோர் தங்களது மகனுடன் தற்போது அமெரிக்காவில் குடியேறிவிட்டனர்.

அடிப்படையில், ஹரியும் மேகன் மார்கலும் இன்னமும் அரச குடும்பத்தின் உறுப்பினர்களாக தொடர்ந்தாலும், கடந்த மாதம் இவர்கள் இருவரும் அரசு குடும்ப உறுப்பினர்களுக்கான பொறுப்புகளிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்படுவதாக பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் அறிக்கையொன்றின் மூலம் கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று ஒளிபரப்பான இரண்டு மணி நேர நேர்காணலில் ஹரி, மேகன் ஆகிய இருவரும் அரச குடும்பத்தினர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளையும், தங்களது தனிப்பட்ட வாழ்வில் சந்தித்த சவால்கள், தங்களுக்கு பிறக்கவிருக்கும் அடுத்த குழந்தையின் பாலினம் உள்ளிட்டவை குறித்து பேசினர்.

**'நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை'**

அரச குடும்ப வாழ்க்கை குறித்த மேக னின் கருத்துக்களை ஓப்ரா கேட்ட போது, "நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை" என்று கூறிய அவர், இதை நான் ஹரியிடம் கூறுவதற்கு "வெட்கப்படுகிறேன்", ஏனெனில் அவர் "சந்தித்த இழப்புகள்" அவ்வளவு அதிகம் என்று கூறினார்.

அப்போது நீங்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை கொண்டிருந்தீர்களா என்று ஓப்ரா கேட்டதற்கு, "ஆம்" என்று மேகன் பதிலளித்தார். "அது எல்லா பிரச்னைகளையும் தீர்த்துவிடும் என்று நினைத்தேன்" என்று அவர் கூறினார். மேலும், தனது இந்த எண்ணத்திலிருந்து விடுபட தேவையான ஆலோசனையை பெற "அமைப்பொன்றின்" உதவியை நாடும் தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தாகவும் மேகன் தெரிவித்துள்ளார்.

**"குடும்பத்தினர் என்னை பொருளாதார ரீதியில் கைவிட்டனர்"**

ஒரு கட்டத்தில் தனது குடும்பத்தினர் தன்னை பொருளாதார ரீதியில் முற்றிலும் கைவிட்டதாகவும், தனது பாதுகாப்புக்கு தானே பணம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் இளவரசர் ஹரி நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

**அரச குடும்ப பொறுப்பை துறக்க என்ன காரணம்?**

எனினும், தன்னுடைய தாய் விட்டுச்சென்ற பணம் தன்னிடம் இருப்பதாக அவர் கூறினார். "என்னைப் பொறுத்தவரை, நான் மிகவும் நிம்மதியாக இருக்கிறேன். என் மனைவி என் பக்கத்தில் அமர்ந்திருக்க, உங்களுடன் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று அவர் கூறுகிறார்.

அரச குடும்ப பொறுப்புகளிலிருந்து விலகியபோது சந்தித்த விடயங்கள் குறித்து மேலும் பேசிய அவர், "இது எங்கள் இருவருக்கும் நம்பமுடியாத அளவிற்கு கடினமாக இருந்தது. ஆனால் குறைந்தபட்சம் நாங்கள் ஒருவருக்கொருவராக இருந்தோம்" என்று ஹரி கூறினார்.

அரச குடும்ப பொறுப்பில் இருந்து விலக என்ன காரணம் என்று ஓப்ரா கேட்டபோது, "அது அவசியப்பட்டது," என்று ஹரி கூறினார். "நாங்கள் எல்லா இடங்களுக்கும் தனித்தனியாகவும் இணைந்தும் சென்று உதவி கேட்டோம்" என்று அவர் கூறினார்.

அப்படியென்றால் நீங்கள் உதவி கேட்டு அது கிடைக்காமல் போனதால்தான் அந்த முடிவை எடுத்தீர்களா என ஓப்ரா கேட்டதற்கு, "ஆமாம்" என தெரிவித்த ஹரி, "அப்போதும் கூட நாங்கள் குடும்பத்தை விட்டு விடவில்லை," என்று கூறினார். அப்போது மேகன், "அவர்கள்தான் ஏற்கெனவே உள்ள ஒரு வகை பொறுப்பில், அதாவது அரச குடும்பத்து மூத்த உறுப்பினர் பொறுப்பில் இல்லாதவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என விரும்பினார்கள்," என்று தெரிவித்தார்.

எனது ஒரே வருத்தம் எல்லாம் வரலாறு மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறது என்பதுதான் என்று கூறிய ஹரி, சமூக ஊடக பரிணாமங்களும் போட்டியும், எனது தாய்க்கு நேர்ந்த நிலையை விட இது மிகவும் அபாயகரமானது என்பதை உணர்த்துகிறது என்று தெரிவித் தார்.

முன்னதாக நேர்காணலின் தொடக் கத்தில் கர்ப்பிணியான தனது கருவில் வரும் குழந்தையின் பாலினம் பற்றி கூட தாங்கள் அறிந்திருந்ததாகவும், நேர் காணலின் இடையே ஹரியும் சேரும் போது அந்த தகவலை இருவரும் சேர்ந்து பகிர்வதாக மேகன் கூறினார்.

**ராணியுடன் முதல் சந்திப்பு அனுபவம்**

மகாராணியுடனான முதல் சந்திப்பு அனுபவம் பற்றி கேட்டதற்கு, "முதல் முறையாக பார்த்தபோது அது ஒரு பெரிய சம்பிரதாயமாக எனக்கு தோன்றவில்லை," என மார்கல் கூறினார். ஆனால், ஹரி தன்னிடம் மரியாதை செய்வது எப்படி என தெரியுமா என கேட்டபோது, "எப்படி செய்வது" என வியந்தேன் என்கிறார் மேகன்.

"உண்மையில் வெளியில்தான் அப்படி எல்லாம் நடக்கும். அரண்மனைக்கு உள்ளே அப்படி இருக்காது என்றே நினைத்தேன்," என்று மேகன் கூறினார். அப்போது தானும் ஹரியும் முழங்கால் மண்டியிட்டு மகாராணிக்கு மரியாதை தெரிவித்ததாக கூறிய அவர், அந்த நேரத்தில் எப்படி செய்தேன் என்பதை சரியாக நினைவுபடுத்திப் பார்க்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

நல்ல வேளையாக அரச குடும்பம் பற்றி அதிகமாக நான் அறிந்திருக்கவில்லை. அது பற்றி நான் ஆராயவும் இல்லை என்று மேகன் மேலும் கூறினார்.

**மூன்று நாட்களுக்கு முன்பே நடந்த திருமணம்**

"எங்களுடைய திருமணம் தேவாலயத்தில் முறைப்படி நடக்கவிருந்த மூன்று நாட்களுக்கு முன்பே எங்களுக்கு திருமணம் நடந்துவிட்டது. இதுவரை அது பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. கேட்டர்பரி பேராயரை அழைத்து, உலகின் பார்வைக்குதான் பெரிய திருமணம், ஆனால், எங்களுடைய இணைப்புக்கான திருமணமாக இது நடக்க வேண்டும்" என்று கூறினோம் என்றார் மேகன். இந்த தகவலை முன்பே பதிவு செய்த கலந்துரையாடல் தொகுப்பின் போது மேகன், ஹரி தம்பதி ஓப்ராவிடம் தெரிவித்தனர்.

**மகாராணி எனக்கு அற்புதமானவர்**

அரச குடும்பத்துக்கும் அமைப்புக்கும் இடையிலான வேறுபாட்டை வலியறுத்திக் குறிப்பிட்ட மேகன், "அது மக்கள் பற்றியும் அவர்களைச் சுற்றி நடக்கும் தொழில்கள் பற்றியுமானது. எனக்கு எப்போதுமே மகாராணி அற்புதமானவராக இருந்தார். அவருடன் இருப்பதை நேசித்தேன். 2018 இல் அவரை முதலாவதாக பார்த்தபோது எனக்கு தனது பவள காதணிகளையும் நெக்லஸையும் பரிசாக வழங்கினார். எப்போதுமே அவர் உள்ளார்ந்த வரவேற்பை வழங்குபவராக இருந்தார் என்று மேகன் கூறினார்.

அவரைப் போலவே அரச குடும்பத்தில் உள்ளவர்கள் செய்தார்களா என ஓப்ரா கேட்டபோது, எல்லோரும் அப்படித்தான் இருந்ததாக நினைக்கிறேன் என மேகன் பதிலளித்தார்.





**"தனிமை உணர்வு மேலோங்கியது"**

அரச குடும்பத்தில் இருப்பது பற்றி அதிகம் விவரித்த மேகன் மார்கல், நினைத்தபடி நண்பர் களுடன் மதிய உணவுக்கு செல்ல முடியாதது போன்ற கட்டுப் பாடுகள் போடப்பட்டபோது, தனிமையில் இருப்பது போன்ற உணர்வு மேலோங்கியது என்று தெரிவித்தார்.

அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், சிறிது காலம் எங்கும் செல்லாமல் இருக்குமாறு கூறியதாகவும், அவரிடம் மாதக்கணக்கில் நான் எங்குமே வெளியே செல்லவில்லை என்று குறிப்பிட்டதாகவும் மேகன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பொது முடக்கத்தால் மக்கள் கடந்த ஆண்டில் முடங்கியபோது அவர்கள் எவ்வாறு சுதந்திரத்தை இழந்திருப்பார்கள் என்ற நிலையுடன் தனது நிலையை மேகன் ஒப்பிட்டார்.

**"பிள்ளைக்கு பட்டத்து உரிமையை கூட கிடைக்க விடவில்லை"**

தங்களுக்கு ஆர்ச்சி மகனாக பிறந்தபோது அவரை இளவசர் ஆக அறிவிக்கவில்லை. அந்த தகவல் கிரகித்துக் கொள்ள மிகவும் கடினமாக இருந்தது. காரணம் அது பட்டம் பற்றியது மட்டுமல்ல. அவருக்கு பாதுகாப்பு கிடைக்காது என்பதுதான்.

இது எல்லாவற்றையும் எனக்கு அதுவரை கிடைத்திராத தாய் என்ற பட்டம் இருந்தது மிக முக்கியமானது. எனது மகன் பாதுகாப்பாக இல்லாதது மற்றும் இந்த குடும்பத்தின் முதல் வாரிசு, மற்ற பேரப்பிள்ளைகளைப் போல பட்டத்துடன் அழைக்கப்படாதது வருத்தம்தான். நான் கர்ப்பமாக இருந்தபோதே எனது பிள்ளைகளுக்கு இளவரசர் பட்டமோ இளவரசி பட்டமோ வழங்கப்படாமல் இருக்க விதிகள் மாற்றப்பட்டன. அப்படி பறிப்பது அவர்களின் உரிமை கிடையாது. ஏன் எப்படி செய்ய வேண்டும்?"

பட்டப்பெயர் தொடர்பாக நானும் ஹரியும் முடிவு எடுத்ததாக வெளிவந்த தகவல்கள் தவறு" என்றும் மேகன் கூறினார்.

மகனின் நிறம் குறித்து கவலைப்பட்ட அரச குடும்ப உறுப்பினர்

"ஆர்ச்சிக்கு ஏன் இளவசர் பட்டம் கிடைக்கவில்லை. அது இன ரீதியிலானதா, நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?" என ஓப்ரா கேட்டபோது, "உண்மையான பதிலை தெரிவிக்கிறேன்."

"அது நான் கர்ப்பமாக இருந்த மாதங்கள். அப்போதே எனது பிள்ளைக்கு பாதுகாப்பு கிடைக்காது, பட்டம் கிடைக்காது என்று நாங்கள் பேசத் தொடங்கியிருந்தோம். பிறப்பிலேயே மகனின் கறுப்பு நிறம் பற்றிய கவலைகளும் பேச்சுகளும் எழுந்தன," என மேகன் கூறியபோது, "யார் என்ன பேசினார்கள்" என ஓப்ரா கேள்வி எழுப்பினார்.

ஆனால் அதை வெளியிட மறுத்த மேகன், "அது அவர்களுக்கு மிகவும் பாதிப்பை தரலாம். அரச குடும்பத்திடம் இருந்து ஹரிக்கும் அவர் மூலமாக எனக்கும் வந்த பதில்கள் அவை. பகுதி, பகுதியாக நடந்த அந்த உரையாடல்களை கேட்பது மிகவும் கடுமையானதாக இருக்கும்" என்று கூறினார். ■

# தமிழ் வரலாற்றையும் கலாசாரத்தையும் அழிக்கும் உத்திகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 வது கூட்டத் தொடர் இலங்கை நிலைமை குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் கொடூரமான உள் நாட்டுப் போர் முடிந்து 12 ஆண்டு களுக்குப் பின்னும் இலங்கை எவ்வாறு மென் மேலும் ஓர் இனநாயக நாடாக சென்று கொண்டிருக்கின்றது என்பதையும், தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படு வதையும் சிங்கள மயமாக்கப்படு வதையும் ஒரு புதிய அறிக்கை விபரிக்கின்றது.

அமெரிக்காவைத்தளமாகக்கொண்டுள்ள ஒக்லாண்ட் நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஒக்லாண்ட் நிறுவனம் மேலும் தெரிவித் துள்ளதாவது :

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேர வையின் 46வது கூட்டத்தொடர் இலங்கை நிலைமை குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் கொடூரமான உள்நாட்டுப்போர் முடிந்து 12 ஆண்டுகளுக்குப்பின்னும் இலங்கை எவ்வாறு மேன் மேலும் ஒரு இனநாயக நாடாக சென்றுகொண் டிருக்கின்றது என்பதையும், தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப் படுவதையும் சிங்களமயமாக்கப்படு வதையும் ஒரு புதிய அறிக்கை விபரிக் கின்றது.




தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங் களில் இராணுவ ஆக்கிரமிப்பு தீவிர மாக உள்ளது - வடக்கு மாகாணத் தில் ஆறு குடிமக்களுக்கு ஒரு இரா ணுவ சிப்பாய் எனும் விகிதமும் முல் லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு குடிமக்களுக்கு ஒரு இராணுவ சிப் பாய் எனும் விகிதமும் இருக்கிறது.

வடக்கையும் கிழக்கையும் புவியி யல் ரீதியாக பிரிக்கும் அரசாங்கத் தின் முக்கிய நோக்கத்துடன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், யுத்த வெற்றி நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், வனவிலங்குகள் சரணாலயங்கள், வனப்பகுதி ஒதுக்கங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் கலாச்சாரத்தையும் வரலாற் றையும் திட்டமிட்டு அழிக்கும் உத்திகள் இடம்பெறு கின்றன.

நீதியை நிலை நாட்டும் வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டு, எதிர்காலதில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை நிறுத்தவும் தடுக்கவும் சர்வதேச சமூகத்தின் செயல் ரீதியான வகிபாகத்தின் அவசியத்தையும் வலியுறுத்தி ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை ஆறு நாடுகள் கூட்டாக சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேர வைக்கு முன்வைத்துள்ள இலங்கை தொடர்பிலான முதல் வரைவு அலட்சியப்படுத்தியுள்ளது.

இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் திற்கு பாரப்படுத்த வேண்டும் என்ற மனித உரிமை ஆணை யாளர் பச்சிலட் மற்றும் நான்கு முன்னாள் ஆணையா ளர்கள், ஐ. நாவின் ஒன்பது முன்னாள் சிறப்பு பிரதிநிதிகள், இலங்கை தொடர்பிலான ஐ. நா செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையை தயாரித்த அனைத்து உறுப்பினர்கள் ஆகியோரது பரிந்துரைகளை ஐ.நா மனித உரிமை பேரவை தீர்மானத்தில் உள்ளடக்கவேண்டும்.


அனுராதா மிட்டால்

**இலங்கையில் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்கள மயமாக்கப்படுவதையும் ஆக்கிரமிக்கப்படுவதையும் அம்பலப்படுத்தும் புதிய அறிக்கை**

Oakland, CA: ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேர வையின் 46வது கூட்டத்தொடர் இலந்கையைப் பற்றிய புதிய தீர்மானத்தை ஆராய்கின்ற வேளையில், ஒக்லாண்ட் நிறுவனத்தின் புதிய அறிக்கையான - 'முடிவற்ற போர்: இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம்", என்ற புதிய ஆய்வு அறிக்கை, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ந் தும் எந்தளவுக்கு துன்பப்படுத்தப்டுகின்றார்கள் என்பதற் கான அதிர்ச்சியளிக்கும் ஆதாரங்களை முன்வைக்கின்றது.

சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றவும், தமிழ் மக்கள் தமது நிலங்களுக்கு செல்வதை தடுக்கவும் அபிவிருத்தி திட்டங்கள்என்ற போர்வையில்தமிழர்பிரதேசங்களில்அரசாங் கங்களினால் முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றம் வளர்ந்து வருகிறது.

"நீர்ப்பாசன திட்டங்கள், இராணுவ குடியேற்றங்கள், தொல்பொருள் இட ஒதுக்கீடுகள், வனவிலங்கு சரணா லயங்கள், வனப்பகுதி மற்றும் சிறப்பு பொருளாதார வல யங்கள் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் நில அபகரிப் பானது 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து மேலும் மோசமடைந்துள்ளதாக" அறிக்கைக்கான ஆராய்ச்சியை ஒருங்கிணைத்து செயற்பட்ட அனுராதா மிட்டால் தெரிவித்தார்.

"தமிழர்கள் அவர்களது பரம்பரை நிலங்களை பயன் படுத்த அனுமதி மறுப்பது, கிராமங்களின் பெயரை மாற்று வது, தேவாலயங்கள் மற்றும் இந்து கோவில்களை பௌத்த விகாரைகளாக மாற்றுவது, சிங்கள மேலாண்மையை நிலை நாட்டும் நினைவுச்சின்னங்களை நிறுவுவது போன்றவை, தமிழர் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அழிக்கும் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாகும். பாரம்பரிய தமிழ் தாயகத்தை புவியியல் ரீதியாக துண்டாட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் உத்தி" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த உத்திக்காக, மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம், வன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை பயன் படுத்தப்படுவதை இந்த அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

போருக்குப் பிந்தைய இலங்கை பற்றிய நான்காவது ஒக்லாண்ட் நிறுவனத்தின் அறிக்கையான "முடிவற்ற போர்: இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம்", என்ற புதிய ஆய்வு அறிக்கை, நில அபகரிப்பு மற்றும் தமிழ் மக்கள் மீது பரந்தளவில் காணப்படும் இராணுவ மயமாக்கலின் பாதிப்பு ஆகிய வற்றை தக்க தருணத்தில் வெளிக்கொண்டு வருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு தீவிரமாக உள்ளது - கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆறு குடிமக்களுக்கும் ஒரு இராணுவ உறுப் பினர் என்ற விகிதாசாரம் காணப்டுகின்றது.

"இராணுவம் தொடர்ந்து ஏராளமான நிலங்களை ஆக்கிர மித்து வருகிறது. 5 நட்சத்திர உல்லாச விடுதிகள், சிற் றுண்டிசாலைகளை இராணுவத்தினர் நடத்துகின்றனர். ஆக் கிரமித்துள்ள நிலங்களில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கை செய்கின்றனர். இராணுவத்தின் தீவிர பிரசன்னம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது" என்று மிட்டால் மேலும் தெரிவித்தார். இதேவேளை, யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும், யாழ் மாவட்டத்தில் மட்டும் 23,000 க்கும் மேற்பட்ட மக்கள் இன்னமும் இடம்பெயர்ந்து தமது மீள் குடியேற் றத்துக்காக காத்திருக்கின்றனர்.

இலங்கை முழுவதும் சிங்கள மற்றும் புத்த மதத்தின் மேலா திக்கத்தை ஏற்படுத்தும் வகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கு ராஜ பக்ஸ அரசாங்கமானது இராணு வம் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்களை பயன்படுத் தும் செயல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உட னடி கவனத்தை ஈர்க்கவேண்டும்.

"ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மிச்சலே பச்சிலட் ஜனவரி 2021 இல் இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கை கடந்த கால மனித உரிமை மீறல் களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதின் அவசி யத்தை வலி யுறுத்துவது மட்டுமல்லாமல் எதிர்கால வன்முறை மற்றும் முரண்பாடுகளை தடுக்கவும் தவிர்க்கவும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. யுத்தத்தின்போது போர்க்குற்ற சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவ உயர் தளபதிகள் மற்றும் ஏனையவர்க ளுக்கு எதிரான தடைகள், மற்றும் இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப் படுத்துதல் போன்ற ஆணையாளரின் அழைப் பானது, நீதி மற்றும் மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கு இன்றியமையாதது " என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆறு நாடுகள் கூட்டாக சேர்ந்து ஐக்கிய நாடு கள் மனித உரிமைப் பேரவைக்கு முன்வைத்த இலங்கை தொடர்பிலான முதல் வரைவு தீர்மான மானது நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நிலையான அமைதியை உறுதி செய்வதற்கான தெளிவான அணுகு முறையை கோடிட்டு காட்ட தவறிவிட்டது.

ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் பச்சி லட், முன்னாள் ஆணையாளர்கள், ஐ. நாவின் ஒன் பது முன்னாள் சிறப்பு பிரதிநிதிகள் மற்றும் ஐ. நா செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக் கையை தயாரித்த அனைத்து உறுப்பினர்கள் ஆகி யோரது பரிந்துரைகளில் இருந்து இந்த வரைபு முற்றிலும் விலகி நிற்கிறது. இலங்கையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடையாளம் ஆகியவற்றின் துன்பகரமான யதார்த்தத்தை 'முடிவற்ற போர்' வெளிப்படுத்து வதுடன் மோசமடைந்து செல்லும் மனித உரிமைகள் நிலைமையை சீர்படுத்துவதற்கு சர்வதேச சமூகதின் கூட்டு நடவடிக்கைக்கான ஆதாரங் களை முன்வைக்கின்றது " என்று மிட்டால் மேலும் கூறினார்.

இந்த பரிந்துரைகளை ஐ. நா மனித உரிமைகள் சபை தீர்மானம் உள்ளடக்க வேண்டும் என்பதுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு மற்றும் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் அதேவேளை, வடக்கு -கிழக்கில் இராணுவ மயமாக்கல் இல்லாமல் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்த வேண்டும். இவ்வாறு செய்ய தவறுவது, சர்வ தேச மனித உரிமைகள் பரிபாலனத்தை மீண்டும் கேலிக் கூத்தாக்கு வதாக அமையும்.

முடிவற்ற போர் அறிக்கையானது போருக்குப் பிந் தைய இலங்கையில் நிலப் பிரச்சனை மற்றும் மனித உரிமை மீறல்களையும் ஆராயும் நான்காவது அறிக்கை யாகும். நிறுவனத்தின் முந்தைய அறிக்கைகளைப் படிக்க பின்வரும் இணைப்பைப் பார்க்கவும். ■


https://www.oaklandinstitute.org/country/sri-lanka

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**9**


2015





2016

* 01 ஆம் 02 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமானபகுதியைத் தெரிவுசெய்க.

01.





02.





2017

* 01 ஆம் 02 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமானபகுதியைத் தெரிவுசெய்க.


01.




02.





13. பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமானபகுதியைத் தெரிவு செய்க.




2020

05. இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய எந்த உருவத்துண்டை இணைக்க வேண்டும்?




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# தேசிய பொருளாதாரம் படுபாதாளத்தில் விழும்

## ரணில் எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச்.09**

**தேசிய பொருளாதாரம் இவ் வருட இறுதியில் பாரிய நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும். பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் சிறந்த கொள்கைத் திட்டம் ஏதும் கிடையாது.**

அரசாங்கம் தனது பலவீனத்தை மறைத்துக்கொள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது.

அரசாங்கத்துக்கு நற்சான்று வழங்கிய ஊடகங்கள் இன்று அரசாங்கத்தின் குறைபாடுகளைப் பகிரங்கப்படுத்தாமல் மௌனம் காப்பது கவலைக்குரியது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயல்பாட்டின் விளைவை நாட்டு மக்கள் இவ்வருட இறுதியில் அறிந்துகொள்வார்கள். அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பல இறக்குமதிகள் ஊடாக வரிச்சலுகை வழங்கியது. இதனால் சாதாரண மக்கள் பயன்பெறவில்லை. இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர முன்னின்று செயல்பட்ட செல்வந்தர்கள் மாத்திரம் பயனடைந்தார்கள்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் 2019 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பெருந்தொகை நாணயங்களை அச்சிட்டுள்ளது.

இவ்வாறான தன்மை நாட்டின் நிதி நெருக்கடி நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முறையற்ற பொருளாதார முகாமைத்துவ கொள்கையை செயல்படுத்துகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் வகுக்கப்பட்ட புதிய பொருளாதார முகாமைத்துவ கொள்கைகள் அனைத்தையும் அரசாங்கம் நிராகரித் துள்ளது.

சிறந்த விடயங்களைச் செயல்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது. சர்வதேசத்தில் அரச முறை கடன்களைப் பெற முடியாத அளவுக்கு அரசாங்கம் சர்வதேச மட்டத்திலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. இவ்வாறான தன்மை பெரும் விளைவுகளை ஏற்படுத்தும்.

இளம் தலைமுறையினர் அரசாங்கத்தின் மீது அதிக நம்பிக்கை வைத்து ஆதரவு வழங்கினார்கள். இன்று இளைஞர் - யுவதிகளின் எதிர்பார்ப்பு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வேலையில்லா பற்றாக்குறை தோற்றம் பெற்றுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் நாட்டில் தொழில்துறையை மேம்படுத்த வேண்டும். ஆனால், தற்போது வெளிநாட்டு முதலீடுகளால் கூட இளைஞர் - யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை.

அரசாங்கத்தின் பலவீனத்தன்மையை அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து சுட்டிக்காட்ட வேண்டும். அரசாங்கத்துக்கு நற்சான்றிதழ் வழங்கிய ஊடகங்கள் அரசாங்கத்தின் குறைபாட்டை சுட்டிக் காட்டாமல் மௌனம் காப்பது கவலைக்குரியது. அரசாங்கம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு கூட பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது- என்றார். (எ)

# ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது

கொழும்பு,மார்ச்.09

இலங்கையில் இதுவரையில் 7 இலட்சத்து 29 ஆயிரத்து 562 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இதேவேளை கொவெக்ஸ் திட்டத்தின் கீழ், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு நேற்று முதல் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் 20 சதவீதமான தடுப்பூசிகள் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தன.

இதன்படி, கொவெக்ஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சுகாதார அமைச்சுக்கு 14 இலட்சம், அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

இதேவேளை, நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 5 ஆயிரத்து 284 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இதனையடுத்து, கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் இதுவரையில் 7 இலட்சத்து 29 ஆயிரத்து 562 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. (எ)

# நாட்டின் பல இடங்களில் மழையுடனான காலநிலை

கொழும்பு,மார்ச்.09

மத்திய, சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் காலை வேளையிலும் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை அரசாங்கம் நிராகரிப்பது வெட்கக்கேடானது

## அநுரகுமார விமர்சனம்



கொழும்பு,மார்ச் 09

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று தெரிவித்த இந்த அரசாங்கம் தற்போது அதனை நிராகரிப்பது வெட்கக்கேடான விடயம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை அரசாங்கத்தில் இருக்கும் சிலர் நிராகரித்து வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையை முழுமையாக நம்பிக்கை வைத்து, தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனையை பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்துவந்த அரசாங்கமே இன்று அறிக்கையை நிராகரித்து வருவது வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதி தேர்தலின்போது தேர்தல் மேடைகளில் திரும்பத் திருப்ப பேசப்பட்ட விடயம்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதாகும். அதற்காக இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையையே அவர்கள் நம்பியிருந்தனர்.

அத்துடன் தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவைத் தவிர வேறு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது அறிக்கை வெளியில் வந்ததுடன் அதுதொடர்பில் பல்வேறு தரப்பினர் விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்துக்கும் வேறு வழியின்றி தற்போது குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது எனத் தெரிவித்து வருகின்றது.

அப்படியானால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும் குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களுக்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என கேட்கின்றோம்.

அதேபோன்று முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பல நபர்கள் இந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள். இதுதொடர்பில் போதுமான சாட்சியங்கள் இருப்பதாகவும், இவர்கள் தேர்தல் மேடைகளில் பகிரங்கமாகத் தெரிவித்துவந்தனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தில் இருப்பவர்களே இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பூரணமில்லாமல் இருப்பதாகத் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் நாங்கள் வெட்கப்படுகின்றோம்- என்றார். (எ)

# மேல் மாகாணத்தில் 1,156 பேர் கைதாகினர்

கொழும்பு,மார்ச் 09

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் 1,156 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 584 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும், ஏனையவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஓட்டோக்கள் திருடப்பட்டுள்ளன என தங்களுக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனால் நகர்ப்புறங்களில் வாகனங்களை நிறுத்தும்போது பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# இந்தியாவிடமிருந்து தடுப்பூசி பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் இலங்கை மாற்றுவழி

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச்.09

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து கொரோனா தடுப்பூசிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுமாயின் இரண்டாவது முறையாக தடுப்பூசியைச் செலுத்துவதற்காக மாற்றுவழிகளில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சீரம் நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட தீப்பரவலால் இலங்கைக்கு தடுப்பூசிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட ஹேமந்த ஹேரத்: 'தற்போது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள தடுப்பூசிகளில் 7 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள தடுப்பூசிகள் தற்போது சுகாதாரத் தரப்பின் வசமுள்ளது. இந்நிலையில் இரண்டாவது முறையாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் தடுப்பூசி செலுத்த வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் இந்த நிறுவனத்திடமிருந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுமாயின் அதே தயாரிப்பை வேறுவழிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும் இரண்டாவது தடுப்பூசி செலுத்துவதில் பிரச்னை ஏற்படாது. இரண்டாவது முறையாக தடுப்பூசி வழங்கும் காலம் வரும்போது தடையின்றி தடுப்பூசிகள் கிடைக்கும் என்று நம்புகின்றோம்'- என்றார். (எ)




# பெண்கள் உரிமைகளை வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்றுக் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, மார்ச்.09

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுயாதீன அபிவிருத்திக்கான பெண்கள் செயல்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் பெண்கள் உரிமைகளை வலியுறுத்தும் முகமாக மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அரசே! பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் உனது பங்கு என்ன?', 'மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அரசு உறுதிப்படுத்துமா?', 'பெண்களின் மனித உரிமைகள் எங்கே? வீட்டினை ஆளும் பெண்கள் நாட்டினை ஆளமுடியாதா?' போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் 52 சதவீதம் பெண்கள் உள்ள நிலையில் பாராளுமன்றம் போன்ற உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் சபையில் பெண்கள் பிரதி நிதித்துவம் வெறுமனே 5.3 வீதங்களே காணப்படுகின்ற நிலையில் அவை மாற்றப்பட்டு சட்டவாக்கல் சபையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்தல், தற்போது இராஜாங்க அமைச்சின் கீழுள்ள மகளிர் விவகார அமைச்சை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சாக உருவாக்கி பெண் அமைச்சர் ஒருவரின் கீழ் கொண்டு வருதல், அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பெண்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அதனைத் தொடந்து கவனவீர்ப்பு நிகழ்வுக்கு வருகை தந்த உதவி அரசாங்க அதிபரிடம் இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்படடது. (எ)

# முகாமையாளருக்கு எதிராக சில ஊழியர்கள் போராட்டம்



மட்டக்களப்பு,மார்ச்.09

இ.போ.ச. மட்டக்களப்பு சாலை முகாமையாளருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து அவரை இடமாற்றக் கோரி சில ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில், மதவெறி முகாமையாளரே தங்களது அடியாட்களை சாலை வளாகத்தினுள் அடாவடித்தனம் புரிய இடமளிக்க வேண்டாம் போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறும் பொம்மை ஒன்றையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

இந்த முகாமையாளர் கடந்த காலத்தில் இந்த சாலை முகாமையாளராக பணிபுரிந்து இங்கு இடம்பெற்ற மோசடி தொடர்பாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மீண்டும் முகாமையாளராக கடமையேற்ற நிலையில் இவருக்கு எதிராக ஒருபகுதி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# முகக்கவசங்களை அணியமாட்டோம்!

## அடம்பிடிக்கும் அமெரிக்கர்கள்

வொஷிங்டன், மார்ச் 09

அமெரிக்காவின் இடாஹோ மாகாணத்தில் முகக்கவசம் அணிய மாடோம் என தெரிவித்து நூற்றுக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி போடப்பட்டு வந்தாலும், கொரோனா வைரஸ் பரவல் வேகம் தொடர்ந்து அதிகரித்துவருகிறது.

நாளொன்றுக்கு 10,000இற்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே பொது இடங்களில் முகக்கவசம் அணிந்து வருவதை உறுதி செய்யும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இடாஹோ மாகாணத்தில் கொரோனாவை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், முகக்கவசம் அணிய மறுத்து சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




முகக்கவசம் அணிய வற்புறுத்தா தீர்கள், முகக்கவசம் அணிவதும் அணியாமல் இருப்பதும் தங்களின் தனிப்பட்ட விருப்பம் என்பன உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் தெருவில் கூடிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முகக்கவசம் கட்டாயம் என்ற ஆணைகள் தங்கள் சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் என போராட்டத்தி ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கொரோனா தடுப்பூசியை யாரும் போட்டுக்கொள்ள வேண்டாம் என போராட்டக்காரர்கள் அப்பகுதிகளில் பிரசாரம் செய்துவருகின்றனர்.



# யாருக்குமே நாம் அடிபணியோம்!

## மியான்மார் இராணுவம் அறிவிப்பு!

யாங்கூன், மார்ச் 09

எத்தனை தடைகள் விதித்தாலும், உலகிலிருந்து தனிமைப்படுத்தினாலும் எமக்கு கவலையில்லை என மியான்மார் இராணுவம் அறிவித்துள்ளது.

மியான்மாரில் அமுலாகியுள்ள சட்டவிரோத இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டத்தை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட பலப்பிரயோகங்களை பிரயோகிக்கிறது.

இதற்கு ஐ.நா மற்றும் உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மியான்மார் மீது பல தடைகளை விதிக்க உலக நாடுகள் தயாராகி வருகின்றன.

அங்கு நிலவும் அவசரநிலை குறித்து 15 உறுப்பி னர்கள் அடங்கிய ஐ.நா பாதுகாப்புச் சபை கவலை தெரிவித்தபோதும், ரஷ்யா மற்றும் சீனாவின் எதிர்ப்பு பால் கண்டனம் தெரிவிக்க இயலவில்லை. அது, மியன் மாரின் உள்நாட்டு விவகாரம் என்று ரஷ்யாவும் சீனாவும் கூறி வருகின்றன.

மியன்மாரில் ஜனநாயகத்தை மீட்க மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி அந்நாட்டுக்கான ஐநா சிறப்புத் தூதர் கிறிஸ்டின் ஸ்ரானர் பர்கனர் உலக நாடுகளை வலியுறுத்தி இருக்கிறார்.

ஆயினும், எத்தகைய தடைகளை விதித்தாலும் மற்ற நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தினாலும் அதை எதிர்கொள்ளத் தயார் என மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளதாக பர்கனர் கூறினார்.

# இலங்கைத் தமிழ் குடும்பம் ஒன்றுக்காக மெழுகுவர்த்தி ஏந்திய அவுஸ்திரேலியர்!



பிரிஸ்பேன், மார்ச் 09

அவுஸ்திரேலியாவில் நாடு கடத்தல் அபாயத்தை சந்தித்துள்ள இலங்கை தமிழ் அகதிக்குடும்பமான நடேசன் - பிரியா தம்பதிக்கு ஆதரவு தெரிவித்து, அவுஸ்திரேலியர்கள் பலர் மெழுகுவர்த்தி ஏந்தி ஆதரவு தெரிவித்தனர்.

கடந்த 5ஆம் திகதி பிரிஸ்பேன் நகரில் ஒன்றுகூடிய அவுஸ்திரேலியர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி ஆதரவு தெரிவித்தனர்.

நடேசன் - பிரியா தம்பதியருடன் அவர்களது மகள்களான 5 வயது கோபிகா, 3 வயது தரணிகா ஆகியோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவித்து அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதி வழங்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசனுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் பிரஸ்பன் நகரில் உள்ள கிங் ஜோர்ஜஸ் சதுக்கத்தில் அவுஸ்திரேலியர்கள் பலர் மெழுகுவர்த்தி களுடன் ஒன்று கூடினர்.



# பிரெஞ்சு பாராளுமன்ற உறுப்பினர் ஹெலிக்கொப்ரர் விபத்தில் மரணம்

பாரிஸ், மார்ச் 09

பிரான்ஸின்பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல செல்வந்தருமாகிய ஒலிவியே டாசோல்ட் ஹெலிக்கொப்ரர் விபத்தொன்றில் உயிரிழந்தார்.

நாட்டின் வடக்கே நோர்மன்டி பிராந்தியத்தில் அவர் பயணம் செய்த ஹெலி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளானது என்று அறிவிக்கப்படுகிறது.

டுவிலில் உள்ள தனது விடுமுறைக்கால இல்லத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய சமயமே அவரது தனிப்பட்ட ஹெலிக்கொப்ரர் விபத்துக்குள்ளாகியது. விமானியும் உயிரிழந்தார்.

ஹெலிக்கொப்ரர் தரையில் இருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் மரம் ஒன்றில் சிக்கியது என்று கூறப்படுகிறது. சிவில் விமானப் பாதுகாப்பு ஆய்வு நிபுணர்கள் குழு ஒன்று சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் தொடக்கி உள்ளது.

பிரபல கோடீஸ்வரர் சேர்ஜ் டாசோல்டின் மகனாகிய ஒலிவியே டாசோல்ட் (வயது 69) அரசியல், தொழில்துறை, படைத்துறை எனப் பல துறைகளில் அறியப்பட்ட மூத்த அரசியல் பிரமுகர் ஆவார். வலதுசாரி றிப்பப்ளிக்கன் கட்சியைச் சேர்ந்த அவர் சுமார் இருபது வருடகாலம் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தவர். பிரான்ஸின் வடபகுதியில் உள்ள ஒய்சி தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினரான அவர் விமானப்படையிலும் சேவையாற்றி இருந்தார்.அவரது திடீர் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டுவருகின்றனர்.

"நாட்டை நேசித்தவர். தன் வாழ்நாள் முழுவதும் பிரான்ஸ் நாட்டுக்குச் சேவை புரிவதை நிறுத்திக் கொள்ளாத ஒரு வழிகாட்டி ஒலிவியே டாசோல்ட். அவரது கொடூரமான இழப்பு ஈடுசெய்ய முடியாதது " - என்று அதிபர் எமானுவல் மக்ரோன் தனது ருவீற்றர் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

# ஆண்களை மிஞ்சிய பெண்கள்!



சர்வதேச பெண்கள் தினம் நேற்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இந்த நிலையில், சமீபத்தில் செய்யப்பட்ட ஆய்வில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆண்களை விட பெண்களே சிறப்பாக வாகனம் ஓட்டுகின்றனர் என்று தெரியவந்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தை பொறுத்த வரை ஆண்களும், பெண்களும் சொந்தமாக வாகனங்களை வைத்து ஓட்டி வருகின்றனர். ஆனால் ஆண்களை விட பெண்கள் மிகவும் குறைவாகவே விபத் துகளை ஏற் படுத்தியுள்ள னர்.

மேலும் வீதிப் போக்கு வரத்து விதிமுறைகளை முறை யாக மதித்து நடக்கின் றனர். குழந்தைகளை வாகனங் களில் ஏற்றிச் செல்லும் போது சீட் பெல்ட்களை முறையாக பயன்படுத்து கின்றனர். பாதுகாப்பான வகையில் வாகனங்களை ஓட்டிச் செல்வதில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

கடந்த ஆண்டில், ஆண்கள் 26 சதவீத விபத்துகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், பெண்கள் 21 சதவீதம் மட்டுமே விபத்துகள் ஏற்படுத்தியுள்ளனர். மேலும் கடந்த 6 ஆண்டுகளாக கண்காணிக்கப்பட்டு வரும் வீதி விபத்துக்களில் பெண்கள் ஏற்படுத்திய விபத்துகள் மிகவும் குறைவானதாகும்.

வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது அடுத்தவர்களுக்கு ஆபத்தான வகையில் ஆண்கள் அதிகமாக வழித்தடத்தை மாற்றிச் செல்கின்றனர். இதுபோன்ற செயல்களை பெண் சாரதிகள் 67 சதவீதம் செய்வதில்லை. ஆனால் ஆண்களில் 56 சதவீதம் பேர் மட்டும் இத்தகைய செயல்களில் ஈடுபடாமல் உள்ளனர். வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது வழித்தடத்தை மாற்றும் போது சிக்னல்கள் கொடுக்கும் பழக்கத்தை 71 சதவீதம் பெண்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இத்தகைய பழக்கத்தை ஆண்கள் 65 சதவீதம் மட்டுமே பின்பற்றுகின்றனர்.

வாகனங்களை பாதுகாப்பாக ஓட்டிச் செல்ல சீட் பெல்ட் அணிவது மிகவும் அவசியம் ஆகும். இந்த சீட் பெல்ட்களை அணிவதில் பெண்கள் 94 சதவீதமும், ஆண்கள் 91 சதவீதமும் கவனம் செலுத்துகின்றனர்- இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையை வீழ்த்தி தொடரை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்!





இலங்கை அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி வென்றுள்ளது.

ஆண்டிகுவாவில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக் கெட்டுகள் இழப்புக்கு 131 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும் அசேன் பண்டாரா ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், பெபியன் அலென், கெவின் சின்கிளாயர், ஹோல்டர் மற்றும் ஒபெட் மெக்கோய் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 132 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 19 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, லெண்டல் சிமோன்ஸ் 26 ஓட்டங்களையும் பெபியன் அலென் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், லக்ஷான் சந்தகன் 3 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக போட்டியின் வெற்றிக்கு வித்திட்ட பெபியன் அலென் தெரிவு செய்யப்பட்டார்.



## முதல் சம்பியன் பட்டத்தை வென்றார் ஹென்ரி ரூபெல்வ்!

ஏபிஎன் அம்ரோ உலக ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஹென்ரி ரூபெல்வ் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

இந்த சம்பியன் பட்டமாக ஏ.டி.பி தொடரான ஏபிஎன் அம்ரோ உலக ரென்னிஸில் ஹென்ரி ரூபெல்வ் பெறும் முதல் சம்பியன் பட்டமாகும்.

மகுடத்திற்கான எதிர்பார்ப்பு மிக்க இறுதிப் போட்டியில், இத்தாலியின் மார்டன் புசோவிக்ஸ், ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வ்வும் மோதினர்.

இப்போட்டியில் முதல் செட்டே இரசிகர்களை விறுவிறுப்பின் உச்சத்துக்கு கொண்டுச் சென்றது.


டை பிரேக் வரை நகர்ந்த இந்த முதல் செட்டில், ஆக்ரோஷமாக விளையாடிய ஹென்ரி ரூபெல்வ், செட்டை 7-6 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில் இருவரும் நிதானத்துடன் களமிறங்கினர்.

இதிலும் இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். எனினும் தனது அனுபத்தை கொண்டு சிறப்பாக விளையாடிய ஹென்ரி ரூபெல்வ், இரண்டாவது செட்டை 6-4 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

சம்பியன் பட்டத்தை வென்ற ஹென்ரி ரூபெல்வ்வுக்கு பணப் பரிசாக 89,625 யூரோக்கள் வழங்கப்பட்டன. இரண்டாவது இடத்தை பிடித்த மார்டன் புசோவிக்ஸ்க்கு 66,000 யூரோக்கள் வழங்கப்பட்டன.

## 2021 ஐ.பி.எல். போட்டி அட்டவணை வெளியீடு



2021 ஆம் ஆண்டுக்கான விவோ இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளை இந்தியாவில் நடத்த முடிவு செய்துள் ளதாக ஐ.பி.எல். நிர்வாக சபை அறிவித்தது.

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஐ.பி.எல் அகமதாபாத், பெங்களூர், சென்னை, டெல்லி, மும்பை மற்றும் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

இந்த சீசன் 2021 ஏப்ரல் 9ஆம் திகதி சென்னையில் நடப்பு சாம்பியனான மும்பை இந்தியன்ஸ் மற்றும் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருக்கு இடையே முதலாவது போட்டியுடன் ஆரம்பமாகும்.

உலகின் மிப்பெரிய கிரிக்கெட் மைதானமான அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியம் பிளேஒப்களையும் 2021 மே 30ஆம் திகதி இறுதிப் போட்டியையும் நடத்தவுள்ளது.

ஒவ்வொரு அணியும் லீக் கட்டத்தில் நான்கு இடங்களில் விளையாட உள்ளது. 56 லீக் போட்டி களில், சென்னை, மும்பை, கொல்கத்தா மற்றும் பெங்களூரு தலா 10 போட்டிகளையும், அகமதாபாத் மற்றும் டெல்லி தலா 8 போட்டிகளையும் நடத்துகின்றன.

விவோ ஐ.பி.எல்.லின் இந்த பதிப்பின் சிறப்பம்சங்களில் ஒன்று, அனைத்து போட்டிகளும் நடுநிலை இடங்களில் விளையாடப்படும், எந்த அணியும் தங்கள் சொந்த இடத்தில் விளையாடாது. அனைத்து அணிகளும் லீக் கட்டத்தில் 6 இடங்களில் 4 இடங்களில் விளையாடும். பிற்பகல் விளையாட்டுக்கள் 3:30 மணிக்கும், மாலை நேரப் போட்டிகள் இரவு 7:30 மணிக்கும் தொடங்கப்படும்.

கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அனைத்து பாதுகாப்பு நெறிமுறைகளையும் கொண்டு போட்டியை பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்திய பின்னர், வீரர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்போடு ஐ.பி.எல். தனது சொந்த மைதானங்களிலேயே நடத்துவதில் பி.சி.சி.ஐ நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்த ஆண்டு விவோ ஐ.பி.எல். மூடிய கதவுகளுக்குப் பின்னால் விளையாடப்படும், மேலும் போட்டியின் பிற்பகுதியில் பார்வையாளர்களை அனுமதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

*வீதி பாதுகாப்பு உலகத் தொடர்:*

# பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி

வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணிக்கெதிரான போட்டியில், இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

ரய்பூர் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 113 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மதுட் 31 ஓட்டங்களையும் ரஹ்மான் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், ட்ரெம்லட் 2 விக்கெட்டுகளையும் பனேசர், சைட்போடம் மற்றும் ஸ்கோபீல்ட் ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 114 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி, 14 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக,



கெவின் பீட்டர்சன் 42 ஓட்டங்களையும் டேரன் மெடி ஆட்ட மிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச் சில், மொஹமட் ரபீக் 2 விக்கெட்டுகளையும் அலம்கீர் கபீர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 17 பந்துகளில் 7 பவுண்ரிகள் 1 சிக்ஸர் அடங்களாக 42 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட கெவின் பீற்றர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

## அப்ரிடியின் மகளை திருமணம் செய்யும் ஷாஹீன் அப்ரிடி!

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷாஹித் அப்ரிடியின் மகளை, பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் அப்ரிடி திருமணம் செய்யவுள்ளார்.

தனது மகள் அக்ஸாவை திருமணம் செய்து கொள்ள ஷாஹீன் அப்ரிடியின் குடும்பத்தினர் அணுகியுள்ளதை அப்ரிடி உறுதிப்படுத்தியுள்ளார்.

விதி இருந்தால், ஷாஹீனும் அவரது மகளும் திருமணம் செய்து கொள்வார்கள் என்று நம்புகிறேன் என ஷாஹித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

## இலங்கைக் குழாமில் நிஸங்க

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கைக் குழாமில் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிஸங்க இடம்பெற்றுள்ளார்.

இலங்கை இறுதியாக விளையாடிய டெஸ்ட் தொடரான இங்கிலாந்துக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த குஷல் பெரேரா, டில்ருவான் பெரேரா, லக்ஷன் சந்தகான் ஆகியோர் குறித்த குழாமில் இடம்பெறவில்லை.

இந்நிலையில், காயங்களிலிருந்து அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, சகலதுறைவீரர் தனஞ்சய டி சில்வா ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

திமுத் கருணாரத்ன (அணித்தலைவர்), தசுன் ஷானக, பத்தும் நிஸங்க, ஒஷத பெர்ணான்டோ, லஹிரு திரிமன்ன, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், நிரோஷன் டிக்வெல்ல, றொஷேன் சில்வா, தனஞ்சய டி சில்வா, வனிடு ஹஸரங்க, ரமேஷ் மென்டிஸ், விஷ்வ பெர்ணான்டோ, சுரங்க லக்மால், அசித பெர்ணான்டோ, துஷ்மந்த சமீர, லசித் எம்புல்தெனிய.



## சம்பிக்க உட்பட மூவருக்கு எதிரான வழக்கு விசாரணை மே 31ஆம் திகதி!

கொழும்பு,மார்ச்.09

முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளை மே மாதம் 31 ஆம் திகதி எடுத்துக்கொள்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.

சம்பிக்க ரணவக்க மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல, சம்பிக்கவின் சாரதி திலும் குமார ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜகிரிய பகுதியில், கடந்த 2016 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானதில், சந்தீப் சம்பத் எனும் இளைஞர் ஒருவர் காயமடைந்த விவகாரத்தில், சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் இரு குற்றப் பத்திரிகைகள் ஊடாக இரு வேறு வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தார்.

ஒரு வழக்கில் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மட்டும் பெயரிடப்பட்டுள்ள போது, மற்றைய வழக்கில் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர். (எ)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை முன்நிறுத்துங்கள்!

### ஐ.நா.விடம் இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கோரிக்கை



நீதிபதி K.P சிவசுப்பிரமணியம் | நீதிபதி A.K ராஜன் | நீதிபதி அரிபரந்தாமன் | நீதிபதி அக்பர் அலி | நீதிபதி C.T செல்வம்

புதுடில்லி, மார்ச் 09

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமை பேரவையும், அதன் அங்கத்துவ நாடுகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஐ.நா. பொதுச்செயலாளர், மனித உரிமை ஆணையாளர், உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு 5 அவசர கோரிக்கைகளை இந்தியாவின் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஐந்து பேர் கையொப்பமிட்டு கோரிக்கை மனு ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.**

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கைச்சாத்திட்டு இவ்வாறான மனு ஒன்றை அனுப்பி வைத்திருப்பது இதுதான் முதல் தடவையாகும். அவர்கள் அனுப்பி வைத்துள்ள மனுவில் பின்வரும் 5 கோரிக்கைகள் உள்ளடங்கியள்ளன.

1. இலங்கை அரசினை ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

2. இலங்கை அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீண்டும் பாரிய அழிவுகள் ஏற்படா வண்ணம் ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினை வழங்கவேண்டும்.

3. அரசினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு குறித்தும், ஐ.நா மனித உரிமைகள் பேரவை அறிக்கைகளினை தயாரித்து பன்னாட்டு அரசியல் தளங்கள் மற்றும் பன்னாட்டு நீதிமன்றங்களில் கையளிக்க வேண்டும்.

4. ஐ.நா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் பிரிவு 4 கீழ் இலங்கைக்கான சிறப்பு அறிக்கையாளர் ஒருவரினை நியமிக்க வேண்டும்.

5. இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிறப்பு கூட்டத்தொடர் ஒன்றினை நடத்த வேண்டும்.

## 8 தாய்லாந்து பிரஜைகள் கைது

கொழும்பு,மார்ச்.09

கொழும்பு - 03 பகுதியில் செல்லுபடியாகும் விசா ஆவணங்கள் இல்லாத குற்றச்சாட்டில் எட்டு தாய்லாந்து பிரஜைகள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் மூன்று பெண்களும் அடங்குகின்றனர். கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பொலிஸார் நடத்திய சிறப்பு நடவடிக்கையின் போது விசா விதிமுறையை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 9 வெளிநாட்டு பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர். (எ)



## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை சபாநாயகரிடம்

கொழும்பு,மார்ச்.09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இரண்டு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகளை ஜனாதிபதியின் சட்டப்பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்தா ரோஹணதீர, நேற்று சபாநாயகரிடம் கையளித்ததுடன், இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் உடனிருந்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரசாங்க அதிகாரிகள், அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் பழிவாங்கல்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இதில் ஒன்றாகும். இது மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

அத்துடன், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2018 ஆம் திகதி டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையும் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. (எ)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்

### தேசிய பிக்கு முன்னணி வலியுறுத்து

கொழும்பு,மார்ச்.09

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பகுதிகளை நீக்க முயற்சிக்காமல், துரிதமாக நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நடவடிக்கை எடுக்கவேண்டும் என தேசிய பிக்கு முன்னணியின் பொதுச் செயலாளர் வக்கமுல்லே உதித்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட கறுப்பு ஞாயிறு போராட்டத்தில்கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களில் பெருமளவான இலங்கையர்களே உயிரிழந்தனர். அத்தோடு வாழ்நாள் முழுவதும் அங்கவீனர்களாக இருக்க வேண்டிய நிலைக்கு பலர் உள்ளாகியுள்ளனர். இவர்களுக்கான நியாயத்தை பெற்றுக்கொடுக்குமாறு நாம் பலமுறை கோரிக்கை



விடுத்துள்ளோம்.

இந்தத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதன் பிரதிகள் பேராயருக்கும், மகாநாயக்க தேரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அறிக்கையில் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும்.

தாக்குதலுடன் தொடர்புடைய பலரது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதுதொடர்பில் பேராயரும் கவலை தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தின சம்பவத்தின் பின்னர் நியாயமான தீர்ப்பொன்றை பெற்றுக்கொள்ள முடியும் என்கின்ற எதிர்பார்ப்பில் பேராயர், தங்களது மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயல்பட வேண்டாம் என்று கட்டுப்படுத்தியிருந்தார். எனவே தற்போதைய ஜனாதிபதிக்கு இதுதொடர்பில் நியாயத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாரிய பொறுப்புள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு சர்வதேச தலையீடு, தேசிய தலையீடு காணப்பட்டதாகவும், ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றிக் கொள்வதற்காக சிலர் இந்த மரணங்களைப் பயன்படுத்திக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. இதற்கான பதிலை அரசாங்கமே தெரிவிக்க வேண்டும். இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பில் நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் நாம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றார். (எ)

## இதுவும் நடந்தது!

அது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமான பேச்சுவார்த்தைக் காலம்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக புலிகளின் குழுவில் ஐரோப்பா வந்திருந்த கருணா அம்மான், பாரிஸில் இயங்கிய தொலைக்காட்சி நிலையம் ஒன்றின் கலையகத்திற்கு விஜயம்செய்தார். அந்த விஜயத்தை தொலைக்காட்சியில் நேரலை ஒளிபரப்பு செய்தார்கள். அந்தத் தொலைக்காட்சியும் புலிகளால்தான் நடாத்தப்பட்டது. சமகாலத்தில் ஐரோப்பாவில் இயங்கிக்கொண்டிருந்த மற்றுமொரு தொலைக்காட்சியைப் பற்றி அப்போது அவரிடம் கேட்கப்பட்டது. அவரின் அந்த விஜயத்திற்கும் அந்தக் கேள்விக்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை. ஆனால் கருணா அம்மானைக் கொண்டு தமது போட்டித் தொலைக்காட்சிக்கு சேறு பூசுவதற்காகவே அந்தக் கேள்வி கோட்கப்பட்டது என்பது அதனைப் பார்த்துக்கொண்டிருந்த அத்தனை பேருக்கும் புரிந்திருக்கும். இத்தனைக்கும் அந்த மற்றயை தொலைக்காட்சியும் புலிகளின் புகழ்பாடுவதிலேயே நேரத்தை கழித்துக்கொண்டிருந்ததுதான்.

கேள்வி கேட்டவரின் விருப்பத்தை நிறைவுசெய்வதுபோலவே கருணா அம்மானும் பதிலளித்திருந்தார்.

'துரோகிகள் நடத்தும் அந்த தொலைக்காட்சியைப் பற்றியெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்?' - இதுதான் கருணாவின் பதில்.

தம்மோடு போட்டிபோடும் தொலைக்காட்சியை வர்த்தக ரீதியாக எதிர்கொள்ள முடியாதால் அதனை துரோகி ஆக்கி வெற்றிகொள்ள எடுத்த முயற்சியே அது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

இந்த சம்பவம் நடந்து ஒருசில மாதங்களிலேயே புலிகளின் அந்தத் தொலைக்காட்சியில் கருணா அம்மான், துரோகி கருணா ஆகிவிட்டார்.

இதுவரை காலமும் தங்களை மாத்திரமே 'துாய 24 கரட் தமிழ்த் தேசியத் தங்கம்' என்று வர்ணித்துக் கொண்டிருந்தவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர். கூட்டமைப்பிலிருந்து கழற்றி விடப்பட்ட பின்னர் கடந்த தேர்தலில் வெற்றிபெறும் வரை கூட்டமைப்பை மாத்திரமன்றி, பின்னர் தங்களோடு தமிழ் மக்கள் பேரவையில் கூட்டாக இயங்கிய ஈபிஆர்எல்எவ் கட்சியை மாத்திரமன்றி, விக்னேஸ்வரனையும் விமர்சித்துவந்த முன்னணியினர், இப்போது தம்மோடு இதுகால வரை இருந்தவர்களையும் துரோகிகள் பட்டியலில் சேர்த்து வருகின்றனர்.

தமது தேசிய அமைப்பாளராக இருந்த மணிவண்ணனை கட்சியிலிருந்து வெளியேற்றியபோது அவர் மீது சுமத்தப்பட்டது வழக்கம் போலவே 'துரோகி' பட்டம்தான்.

சுமந்திரனும் சாணக்கியனும் ராஜபக்சக்களின் விருப்பத்தை நிறைவு செய்வதற்காகவே பணியாற்றுகிறார்கள் என்று கஜேந்திரகுமார் கூறிய செய்தி வெளிவந்த மறுநாளே,

மணிவண்ணனோ, ராஜபக்சவின் கோரிக்கையின் பேரிலேயே மக்கள் முன்னணி தன்னையும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களையும் வெளியேற்றி யாழ். மாநகரசபை நிர்வாகத்தை கலைக்க முயல்கிறது என்கிறார்.


அவரோடு வெளியேற்றப்பட்ட மற்றுமொரு மாநகரசபை உறுப்பினரான பார்த்திபனோ, கட்சியை பிளவுபடுத்தி துரோகம் இழைத்தமைக்காக 11 வருசத்திற்கு முன்னரே செல்வராசா கஜேந்திரனை கட்சியிலிருந்து நீக்கியிருக்கவேண்டும் என்கிறார்.

இந்தச் செய்திகளை படிக்கின்ற போது எனக்கு கருணா அம்மானின் அந்தப் பேட்டிதான் ஞாபகத்திற்கு வந்தது!

**- ஊர்க்குருவி.**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொறுப்பு கூறவேண்டியவர்களே கூச்சல்!

### சமல் கடும் சாடல்



கொழும்பு,மார்ச்.09

**2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அரசியல் அழுத்தங்களால் பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றிருக்காது.**

இந்நிலையில் பொறுப்புக்கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிடுகின்றனர் என நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீது 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்க்கட்சியால் இது தொடர்பில் 3 நாள்கள் விவாதம் கோரப்பட்டுள்ளது. அரசாங்கம் அதற்குத் தயாராகவுள்ளது. எவ்வாறிருப்பினும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்கள் தாம் அறிந்தவற்றை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூறியிருக்கலாம். அவ்வாறின்றி தேவையற்ற கருத்துக்களை கூறிக்கொண்டிருப்பது பிரயோசனமற்றது. எவ்வாறிருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கையை தொடர்ந்து முறையாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்'- என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத் தவறிய விவகாரம்; 12 மனுக்கள் மீதான விசாரணை திகதி நிர்ணயம்

கொழும்பு,மார்ச் 09

அலட்சியப் போக்கு காரணமாக 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஜூன் 7, 8 மற்றும் 9 திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் தலைமை நீதியரசர் தலைமையிலான ஆறு நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சில அமைச்சர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிரதிவாதிகள் சார்பாக சட்டமா அதிபர் நீதிமன்றில் முன்னிலையாவாரா? என்பது தொடர்பான முடிவு எட்டு வாரங்களில் அறிவிக்கப்படும் எனப் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்தார்.

மேலுல், ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்ய கால அவகாசம் வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், மனுதாரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னிலையான சட்டத்தரணிகள், இந்தக் கால அவகாசத்துக்கு கடும் ஆட்சேபனையை தெரிவித்ததுடன் தாமதத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் அநீதியை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டினர்.

இருதரப்பு பரிசீலனைகளையும் ஆராய்ந்த நீதியரசர்கள் அடங்கிய அமர்வு, 12 மனுக்கள் மீதான விசாரணைகளை ஜூன் 7, 8, 9 ஆகிய திகதிகளில் எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளது. (எ)

### சமூக வலைத்தள பிரச்னைகளால்

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு துரித தீர்வு வழங்கத் திட்டம்



கொழும்பு, மார்ச் 09

இலங்கையில் புகழ்பெற்ற பெண்களின் நற்பெயருக்கு சமூக ஊடகத்தினூடாக ஏற்படுத்தப்படும் களங்கம் காரணாமாக மன அழுத்தம் மற்றும் பிரச்னைகளில் சிக்கியுள்ளவர்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் உடனடி தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம் என பாதுகாப்புச் செயலாளரும், தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளருமான கமால் குணரத்ன தெரிவித்தார்.

மேலும், போர் வீரர்களைப் பராமரிக்கும் 'அபிமன்சல', ஆரோக்கிய விடுதி மற்றும் அங்கவீனமுற்ற போர் வீரர்களின் மனைவி மற்றும் தாய்மார்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டிய கமால் குணரத்ன 'அத்தகைய பெண்மணிகளின் சகிப்புத்தன்மை மகத்தானது' என்றும் கூறினார்.

யுத்தத்தின் போது இத்தகைய மன அழுத்தம் மற்றும் துன்பங்களை தாம் எதிர்நோக்கியதாகவும், போர் வீரர்களின் தாய்மார்களுக்கும் மனைவிகளுக்கும் ஒட்டுமொத்த தேசத்தினது அன்பும் கௌரவமும் உள்ளது என்பதை உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறினார். அத்துடன் ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்புக்குள் கூட இலங்கைப் பெண்ணுக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (எ)




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**

7.30 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# பொதுபலசேனாவுக்கு தடையே கிடையாது!

## அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு பொதுபலசேனா அமைப்பைத் தடை செய்யுமாறு பரிந்துரைத்தபோதிலும் அந்தப் பரிந்துரையை நிராகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடந்த ஊடக சந்திப்பில் உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதல் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் உள்ள சில பரிந்துரைகளை அமுல்படுத்துவது சிரமமாகும். விசேடமாக பொதுபலசேனா அமைப்பு குறித்த பரிந்துரையை அமுல்படுத்துவதானது கடினமாகும். அரசாங்கத்தின் விருப்பமும் அது குறித்து இல்லை. அந்த அமைப்பைத் தடை செய்வதால் நன்மை ஏற்படும் என்றல்ல. ஆகவே அரசாங்கம் அந்த அமைப்பை தடை செய்யாது.



ஆனால் கல்வி குறித்த பரிந்துரைகளை அமுல்படுத்த முடியும். இனவாதச் சிந்தனைகள் பாட விதானங்களில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை நீக்கவேண்டும். மத்ரஸா நிலையங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் உள்ளிட்ட பரிந்துரைகளை கல்வி அமைச்சு அனுமதிக்கின்றது-என்றார்.



# வவுனியாவில் வீடு மீது நேற்று பெற்றோல் குண்டுத் தாக்குதல்

வவுனியா, மார்ச் 09

வவுனியா புளியங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக்காலை பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள பூசகர் வீடொன்றுக்கு நேற்று அதிகாலை 2 மணியளவில் சென்ற இனம் தெரியாத நபர்கள் அங்கு பெற்றோல் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தத் தாக்குதலில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத நிலையில் வீட்டின் கதவு சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# வேகக்கட்டுப்பாடு இழந்த வாகனம் நாயாற்று பாலத்துக்குள் பாய்ந்தது !

முல்லைத்தீவு, மார்ச் 09

வெலிஓயாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற வாகனம் நேற்று வேகக்கட்டுப்பாட்டை இழ்ந்து முல்லைத்தீவு நாயாற்றுப் பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் அந்த வாகனத்தில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், பிள்ளை இருவரும் காயமடைந்தனர். வாகனச் சாரதியான தந்தை எவ்வித காயங்களும் இன்றி தப்பினார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பொது மக்கள், இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வடக்கு சுகாதார தொண்டர்கள் உணவு தவிர்ப்பில் குதித்தனர்!



யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் போராட்டத்தை முன்னெடுத்துவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் 8 ஆவது நாளான நேற்று தமது போராட்டத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக முன்னெடுத்தனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தே இந்தப் போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதாரப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வகையில் சுகாதாரப் பணியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

எனினும் இந்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டமையால் அந்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் நிரந்தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறும் நீண்ட காலமாக தொண்டு அடிப்படையில் வைத்தியசாலைகளில் கடமையாற்றியதாகவும், எனவே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறும் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கண்காணிக்கப்படுகிறாரா கனடா தூதுவர் மக்கினன்?

கொழும்பு, மார்ச் 09

தனது நடவடிக்கைகள் இரகசியமான முறையில் கண்காணிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டுள்ளதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்னால் ஊடகங்கள் எவையும் இல்லாதபோதிலும், ??தனது தனிப்பட்ட கலந்துரையாடல்களை ஊடகங்கள் எவ்வாறு பெறுகின்றன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பங்களாதேஷ் தூதுவரை கனடா தூதுவர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அண்மையில் சந்தித்தமை தொடர்பில் இரண்டு பிரதான உள்நாட்டுச் செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மேலும், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் மற்றும் தென் கொரியத் தூதுவர் இடையேயான சந்திப்பு குறித்தும் உள்ளூர் செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டன.

எனினும், இராஜதந்திரிகள் எவரும் கண்காணிக்கப்படவில்லை எனவும், கனடா தூதுவர் கண்காணிக்கப்படுகிறார் என்ற செய்திகளையும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் அதிபர் அஜித் ரோஹண மறுத்துள்ளார்.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி.கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம்-திரைப்படங்களின் முன்னோட்டக்காணொளிகள்




6.30 மணி : மூவி டோக்கீஸ்-ஆங்கில திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-கவிஞர் சோ.பத்மநாதன்
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)
**இரவு**
7.30 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் வடலியடைப்பு சித்தி விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : அனலைதீவு ஐயனார் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் வடலியடைப்பு சித்தி விநாயகர் கோவில் திருவிழா

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்